Registered No. M-4483.

யுத்த சஞ்சிகை

மலர் IV.] 1943-ம் ௵ செப்டெம்பர் ௴ 17௳, வெள்ளிக்கிழமை [இதழ் 3

போர்க் கோலம் பூண்டு விட்டோம்

சர் ரிச்சர்ட் பியர்ஸ்.

இருபது மாதங்களுக்கு முன்பு இந்தியாவிற்கு யுத்தம் வரவில்லை. டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளின் விமானப் படைகளுக்குத் தலைவனாக நான் அங்கு அனுப்பப்பட்டேன். மிகுந்த கால தாமதத்திற்குப் பிறகு தான் போராட்டத்தை ஆரம்பித்தோம். நம்மிடம் வெகு சில நேச நாட்டு விமானங்கள் தானிருந்தன. எதிரிக்கோ மிகப் பலமான விமானப் படையிருந்தது. என்றாலும், அதை எதிர்த்து நிற்க முயற்சித்தோம்.

சென்ற வருஷம் மார்ச்சு மாதத்தில், பிரிட்டிஷ் விமானப் படையைச் சேர்ந்த போர் விமானங்கள் ஒழுங்காக அமைக்கப்படவில்லை. போராட்டத்திற்கான சாதனங்களும் நம்மிடமில்லை. அந்தச் சமயத்தில் பர்மாவிலிருந்து இந்தியாவைத் தாக்குவதற்கான ஏற்பாடுகளை எதிரி மும்முரமாகச் செய்து கொண்டிருந்தான்.

சென்ற மார்ச்சு மாதத்திலிருந்து இதற்குள்ளாக, இவ்வளவு குறுகிய காலத்திற்குள், இந்தியாவில் ஒரு பெரிய விமானப் படையை அமைத்து விட்டோம். இந்தியாவெங்கும் விமான நிலையங்களும், விமானப் பயிற்சி ஸ்தாபனங்களும் விமானங்களைப் பாதுகாத்து, பழுது பார்த்து, நொறுங்கிப் போனவற்றை மீண்டும் கட்டி முடிப்பதற்கும் பெரிய ஸ்தாபன மொன்றை அமைத்திருக்கிறோம். வடக்கிலும், தெற்கிலும், கிழக்கிலும், மேற்கிலும் போகும் விமானப் பாதைகளை அமைத்து, அவற்றிற்குத் தேவையான எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடித்து விட்டோம்.

இன்று நாம் போர்க் கோலம் பூண்டு நிற்கிறோம். எதிரிகளை எதிர் பார்த்துக் கொண்டு மட்டுமல்ல; போய் எதிரிகளைக் கண்டுபிடிக்கவும் தான். அவனோடு போராடுவதற்குச் சந்தர்ப்பம் எப்போது கிடைக்கு மென்று ஆவலாக எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறோம். இது வேறு நிலைமை. ஊக்கந்தர வல்லது. இதனால் நமக்குப் பெருமை யுண்டு. இது வரை நாம் செய்து முடித்திருப்ப தெல்லாம் ஆரம்ப வேலைகள் தான். செய்து முடிக்க வேண்டியவை இன்னும் அநேகமுண்டு.

உழைப்பின்றி வெற்றியில்லை என்பது தான் என் கொள்கை. இதை இங்கே டில்லியிலும் கையாளுவோம். போராட்டம் ஆரம்பமாகப் போகிறது. ஆகவே, நாம் அதற்கு முந்துவோம்.

விமான பிரதம மார்ஷல் சர் ரிச்சர்ட் பியர்ஸ், இந்திய விமானப் படையின் பிரதம தலைவர் செப்டம்பர் 15-ம் தேதி நடைபெற்ற ஞாபகார்த்த விழாவின் போது செய்த பிரசங்கம்

பொருளடக்கம்.

	பக்கம்.		பக்கம்.
முகப்புப் படம் : சர் ரிச்சர்ட் பியர்ஸ்	1	யுத்த முயற்சியும் வாசகசாலைகளும்	5
போர்க்கோலம் பூண்டு விட்டோம்	1	ரஷ்யாவிற்கு உதவி : சென்னை கொடுத்ததென்ன ?	5
இராணுவ உத்தியோகஸ்தர்கள் தேர்வு ..	2	நொண்டியானூர் முத்தண்ணா	6
பிரிட்டிஷ் கப்பற்படை செய்ததென்ன ? ..	2	யுத்த நெருக்கடியும் அரசாங்க உதவியும் ..	7
தலையங்கம் : பிரிட்டன் யுத்தம் : வெற்றி விழா.	3	தொழிலாளர் பகுதி : தொழிலாளர்களுக்கு அரசாங்க உதவி	8
சொந்தப் பாடம் தானே	4		
மதராஸ் படைகளின் மகிழ்ச்சி	4		

இராணுவ உத்தியோகஸ்தர்கள் தேர்வு

மனோ நிலைப் பரீட்சை

இந்த வருஷம் பிப்பிரவரி மாதத்தில் இராணுவ உத்தியோகஸ்தர்கள் தேர்வு சம்பந்தமாக இந்தியாவில் ஒரு புதிய முறையைக் கையாண்டார்கள். மார்ச்சு மாதத்தில் பல இராணுவ உத்தியோகஸ்தர்கள் விமானங்களில் இங்கிலாந்திலிருந்து இந்தியா வந்து சேர்ந்தார்கள். இவர்கள் கமிஷன் உத்தியோகங்களைக் கோரி மனுச் செய்து கொண்டவர்களின் மன நிலையைக் குறித்து நன்கு பரீட்சித்துத் தேறியவர்கள். கமிஷன் உத்தியோகங்களைக் கோரி மனுச் செய்து கொண்டவர்களின் மனோ நிலை இங்கிலாந்திலும் இந்தியாவிலும் ஒன்று போலிருப்பதாகத் தம் அனுபவத்தி லிருந்து இவர்கள் அறிவிக்கிறார்கள். புதிதாக ஒருவர் கமிஷன் பதவியை ஏற்று பயிற்சி பெற கல்லூரியில் சேர்ந்த வுடனே, அவருடைய மனப் போக்கை யுணரும் பொருட்டு நிபுணர்கள் கூடியதோர் 'போர்டு' இங்கிலாந்தில் நியமிக்கப் பட்டிருக்கிறது. உத்தியோகஸ்தராக ஒருவரைச் சோதித்து எடுக்க 2 அல்லது 3 நாட்கள் பிடிக்கும். இப்படிச் சோதித்து எடுத்ததன் பயனாக, உத்தியோகஸ்தர்கள் பயிற்சிக் கல்லூரியில் 100-க்கு 2 பேர்கள் மட்டுந்தான் தகுதியற்றவர்கள் என்று இப்போது வெளியேற்றப்படுகிறார்கள். ஆனால் இதற்கு முன்பு 100-க்கு 25 பேர்கள் தகுதியற்றவர்கள் என்று வெளியேற்றப்பட்டுக் கொண்டிருந்தனர். போதுமான கல்வி யில்லை என்ற காரணத்தினாலோ, உயர்ந்த குடும்பத்தில் பிறக்காதவர்கள் என்ற காரணத்தினாலோ நிராகரிக்கப்பட்ட பலர், இப்போது உத்தியோகஸ்தர் பதவியை வகிக்க முற்றுந் தகுதி யுடையவர்களாயிருக்கிறார்கள். இதன் பயனாக, கமிஷன் உத்தியோகங்களுக்கு மனுச் செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை அதிகப்பட்டது. இந்தப் புதிய முறையினால், அநேகர் மனுச் செய்து கொண்டனர்.

இவ்வளவிருந்துங் கூட, இந்தப் புதிய முறையை இந்தியாவில் கையாளுவது முடியாத காரியம் என்று சிலர் கவலை கொண்டார்கள். என்றாலும் பரீட்சார்த்தமாக டேரா டூனில் ஒரு 'போர்டு' ஏற்பட்டது. மொழியையும் கலையையும் பற்றிய புதிய நிபந்தனைகளை மேற் கொள்ளும் வேலை ஆரம்பமானது. இந்தப் பரீட்சை நல்ல பலனளித்தது. பிரிட்டிஷ் மனுதார்களும் இந்திய மனுதார்களும் மனப்போக்கிலும் மற்ற பரீட்சைகளிலும் ஒரே நிலையி லிருந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது. இங்கிலாந்தில் பல வருஷ ஆராய்ச்சியின் பயனாக ஏற்பட்ட இந்தப் பரீட்சைகள், இந்தியாவிற்கும் மிகவும் பொருத்தமானவையாயிருந்தன.

டேராடூன் கமிட்டியின் சிறந்த வேலை

மார்ச்சு மாதம் முதல் மே மாதம் வரை டேராடூன் போர்டு, மாணாக்கர்கள் தேர்வு வேலையைத் தொடர்ந்து நடத்தியது. இந்த போர்டின் வேலையை அரசாங்கத்தார் பெரிதும் பாராட்டினர். இதன் வேலைகளைக் குறித்து பரிசீலனை செய்ய பாதுகாப்பு ஆலோசனைக் கமிட்டி யங்கத்தினர்கள் விஜயம் செய்தார்கள். மூன்று நாட்கள் பரிசீலனை செய்த பிறகு பூரண திருப்தியடைந்தார்கள். பிறகு இந்த முறையை இந்தியாவிலும் உடனடியாகக் கையாள வேண்டுமென்று இந்தக் கமிட்டியார் வாதாடினார்கள்.

இதன் பயனாக, ஜூன் மாத மத்தியில் பெங்களூரில் ஒரு போர்டு வேலை செய்ய ஆரம்பித்தது. இதற்கு 5-ம் நம்பர் 'ஜெனர் ஹெட் குவார்ட்டர்ஸ் செலக்ஷன் போர்டு' என்று பெயர். இந்த போர்டார் ஜூலை மீ" த்தில் சென்னைக்குப் போய் இராணுவ உத்தியோகங்களில் சேர்த்துக் கொள்ளப் படும் முன்பு அளிக்கப்படும் பயிற்சி சாலையைப் பார்வையிட்டனர். இவர்களுக்கு முன்னதாகவே மேன்மை தங்கிய சென்னை கவர்னர் அவர்கள் அங்கு விஜயம் செய்து, மாணாக்கர்களின் அறிவையும் தன்மையையும் மனப்போக்கையும் எடை போடும் முறைகளைப் பெரிதும் பாராட்டினார். இந்த போர்டார் விஜயம் செய்த போதும் மேன்மை தங்கிய சென்னை கவர்னர் அவர்கள் வந்திருந்து, மாணாக்கர்களைக் குறித்து இராணுவ நிபுணர்களின் கருத்து என்ன என்றும், ஒவ்வொருவரைக் குறித்தும் அந்த போர்டு தலைவர் என்ன முடிவு சொல்லுகிறாரென்றும் கேட்டார்கள். இந்த போர்டு நடவடிக்கைகளில் சில கொள்கைகள் அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டவை. முதலாவதாக, இராணுவத்திற்கு உத்தியோகஸ்தர்கள் தேவை. அநேகம் பேர்களை, மிகச் சிறந்தவர்களாகப் பார்த்துப் பொறுக்கி யெடுக்க வேண் மென்று போர்டார் விரும்புகிறார்கள். இந்த மாணாக்கர்களில் வெகு சிலரை மட்டுந் தான் நிராகரிக்கிறார்கள். இரண்டாவதாக, மனோ ஆராய்ச்சி முறையை யடிப்படையாகக் கொண்டு, இன்னும் இரண்டொரு வருஷங்களுக்குப் பிறகு, இந்தப் பையன் எப்படி இருப்பான் என்பது பற்றிக் கூற முயற்சிக்கப்படலாம். இப்போது அவன் இளைஞன் ; கமிஷன் பதவிக்குரிய பொறுப்புக்களை நிறைவேற்றும் ஆற்றலற்றவன் என்று சொல்லுவதில் பிரயோசனமில்லை. மூன்றாவதாக, மாணாக்கனின் அறிவு, சொல்லிக் கொடுப்பவற்றை எளிதில் உணர்ந்து கொள்ளும் ஆற்றல், தராதரம் இவைதான் முக்கியமானவைகளே யொழிய, பள்ளிப் படிப்பல்ல. பள்ளிப் படிப்பினால் நல்ல பலன் கிடைக்கலாம். ஆனால் பள்ளிக்கூடங்களில் படித்தவர்கள் எல்லோரும் புத்திசாலிகள் என்று சொல்லிவிட முடியாது. மாணாக்கர்கள் எந்தெந்த குறிப்பிட்ட கமிஷன் உத்தியோகத்திற்குத் தகுதியானவர்களோ, அவற்றிற்குத் தான் அனுப்பப்படுவார்களே யொழிய மற்றவற்றிற்கு அனுப்பமாட்டார்கள். ஒரு மாணாக்கர் எந்த வகைக் கமிஷன் உத்தியோகத்திற்குத் தகுதியுடையவர் என்று கண்டு பிடிக்கும் பொருட்டுத் தான், இப்பரீட்சைகள் நடைபெறுகின்றன வென்று அவர்களுக்குத் தெளிவாக விளக்கப்பட வேண்டும். இந்த பரீட்சைகளில் ஒரு மாணாக்கர் தேறவில்லையானால், மற்ற தொழில்களுக்கு அவர் தகுதியற்றவர் என்று அர்த்தமில்லை.

கமிஷன் பதவிகளை ஏற்றுக் கொள்ளும் முன்னதாக, உத்தியோக மாணவர்கள் இப்பயிற்சிசாலையிற் பயிலுவது மிகவும் நல்லது என்று இந்த போர்டார் அனுபவத்தில் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். அன்றியும் சென்னை அரசாங்கத்தார் பொது நோக்க முடையவர்கள் என்பதை இது எடுத்துக் காட்டுகிறது. அன்றியும் இந்தப் பயிற்சியினால் அவர்கள் சிறந்ததோர் நிலையை யடைகிறார்கள்.

பிரிட்டிஷ் கப்பற் படை செய்ததென்ன ?

1940-ம் வருஷம் பிரிட்டன் எழு கடல்களில் போராடிக் கொண்டிருந்தது. எதிரிகளுக்கும் பிரிட்டனுக்கும் இடையே 21 மைல் அகலமுள்ள கடல் தான் குறுக்கிட்டது. ஹிட்லர் இங்கிலாந்தைப் பரிபூரணமாக வெல்ல ஒட்டாதபடி தடுத்துக் கொண்டிருந்தது பிரிட்டிஷ் கப்பற் படைதான்.

அந்த நிலைமை இப்போது மாறி விட்டது. துனிசியக் கடற்கரையில் மூன்று வருஷங்களுக்குப் பிறகு, டன்கர்க்கில் தனக்கு நேர்ந்த தோல்விக்குப் பழி வாங்கி விட்டது பிரிட்டிஷ் கப்பற் படை. அன்றும் இன்றும் இது பிரிட்டனின் பாதுகாப்பாக இருந்து வருவது மட்டுமன்றி, எதிரியைத் தாக்கிக் கொண்டு மிருக்கிறது.

யுத்தத்தைப் பற்றி திட்டமிட்டபோது பிரிட்டிஷ் கப்பற் படையொன்றிருக்கிறது என்பதையே ஹிட்லர் மறந்து விட்டார் போலிருக்கிறது.

பிரிட்டிஷ் தரைப் படையைப் போலவே, பலவகை எதிர்ப்புக்களைச் சமாளிக்க வேண்டிய அவசியம் பிரிட்டிஷ் கப்பற் படைக்கும் இருந்தது. பிரான்சு சிதைந்து போனதனாலும், இத்தாலியும் ஜப்பானும் போரில் இறங்கியதனாலும், பிரிட்டிஷ் கப்பற் படைக்குக் கடுமையான வேலை ஏற்பட்டது.

மிகக் கொஞ்சம் துணைக்கப்பல்களே நஷ்டம்.

1,20,000 கப்பல்களுக்கு அதிகமாகவே பிரிட்டிஷ் கப்பல்களும் நேச நாட்டுக் கப்பல்களும், துணைக் கப்பல்களால் பந்தோபஸ்தாகக் கொண்டு போய்ச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்தத் துணைக் கப்பல்களில் 200-ல் 1 விகிதந் தான் நஷ்டமாயின.

நார்வே, டன்கர்க், க்ரீஸ், க்ரீட் ஆகிய இடங்களிலிருந்து பிரிட்டிஷ் படைகளை வெளியேற்றிக் கொண்டு வர பிரிட்டிஷ் படைக் கப்பல்களும் வியாபாரக் கப்பல்களும் மிகுந்த பங்கு கொண்டன.

உலக முழுதிலுமுள்ள பல போர் முனைகளுக்கும் பிரிட்டிஷ் படைக் கப்பல்கள் படைகளை ஏற்றிக்கொண்டு போய்ச் சேர்க்கின்றன.

மத்திய கிழக்குப் போர் முனைக்கு நன்னம்பிக்கை முனை வழியாக ஆப்பிரிக்காவைச் சுற்றிக்கொண்டு போக 12,000 மைல் தூரமாகிறது ; இந்தியாவிற்கும் இதே யளவு தூரந் தான்.

படைக் கப்பல்களுக்குத் துணையாகப் போன கப்பல்களில் வெகு சில தான் நஷ்டமாயின. சுமார் 30 லட்சம் பேர்கள் படையினர், உலகம் முழுதும் கப்பல்களில் ஏற்றிக்கொண்டு போகப்பட்டனர். அவர்களில் கொல்லப்பட்டவர்களும், மூழ்கி மாண்டவர்களும், காணாமற் போனவர்களும் சேர்ந்து 1,348 பேர்கள் தான்.

யுத்த சஞ்சிகை
வார வெளியீடு

மலர் IV] 1943-ம் ஸு செப்டெம்பர்மீ 17உ. [இதழ் 3

பிரிட்டன் யுத்தம்: வெற்றி விழா

பிரிட்டனில் நடைபெற்ற யுத்தத்தில், பிரிட்டிஷ் விமானப் படைகள் ஜெர்மன் விமானப் படைகளை அடியோடு முறியடித்தது 1910-ம் வருஷம் செப்டெம்பர் மாதம் 15-ம் தேதி. இந்த வெற்றி ஆண்டு விழாவை செப்டெம்பர் மாதம் 15-ம் தேதி இந்தியாவிலும் இலங்கையிலு முள்ள விமானப் படையினர் கொண்டாடினர். அந்தப் போராட்டத்தில், எதிரிக்குச் சொந்தமான 185 விமானங்கள் நாசஞ் செயயப்பட்டன. பல வர்ணக் கொடிகளைப் பறக்க விட்டு, இப் படைகள் உள்ள எல்லா விடங்களிலும் விழாக் கொண்டாடினார்கள். அந்த விழாவை முன்னிட்டு விமானப் படைத் தலைவர் சர் ரிச்சர்ட் பியர்ஸ் ஒரு வாழ்த்துச் செய்தி யனுப்பி யிருக்கிறார். பெங்களூரில் பிரிட்டிஷ் விமானப் படை அணிவகுப்பு ஒன்று நடைபெற்றது. அப்போது தென்னிந்தியாவின் விமானப் படைத் தலைவரான 'ஏர் கமோடர் பி. எச். மாக்ஹர்த்' ஒரு விசேஷ செய்தியை அனுப்பி யிருக்கிறார். அது வருமாறு:—

"மிகச் சிறந்த முறையில், பிரிட்டிஷ் விமானப் படைகள் ஜெர்மனி மீது வெடி குண்டுகளை வீசி நாசஞ் செய்து வருவது பெரிதும் பாராட்டத் தக்க செயலாகும்." சுமார் 4 மாதங்களுக்கு முன்பு விமான மந்திரி சர் ஆர்ச்சிபால்ட் சிங்க்லேர் எடின்பரோ நகரத்தில் செய்ததோர் பிரசங்கத்தில், கூறியதாவது:—"சாதாரணமாக தரைப் போரில் நடைபெறும் கொலைகளைப் போலவும், சென்ற மகா யுத்தத்தின் போது நேர்ந்தது போன்ற கொலைகளும் இப்போது நேராமல், பெர்லின் நகரத்தைப் போயடைய வேண்டுமானல், நமது வெடி குண்டு விமானங்களைக் கொண்டு ஜெர்மன் யுத்தத் தொழிற் சாலைகளை ஸ்தம்பிக்கச் செய்து விட வேண்டும். ஜெர்மானியர்கள் பல வகை விமான அரண்களை அமைத் திருந்தும் கூட, ஏராளமான வெடி குண்டு விமானங்கள் சுமார் 5,000 பேர்களை ஏற்றிக் கொண்டு, ஜெர்மனிக்கு மேலே பறந்தன. இவை விமானத் தாக்குதல்கள் மட்டுமல்ல; விமான யுத்தங்கள். மியூனிச், எஸ்ஸென், பெர்லின் முதலிய நகர களுக்கு மேலே நடை பெறும் விமான யுத்தத்தில் கிடைக்கும் வெற்றி, இந்த யுத்தத்தின் போக்குக்குப் பெரிதும் தொடர் புடையது."

புகழ் வாய்ந்த விமான விமர்சகரான மிஸ்டர் ஆலிவர் ஸ்டுவர்ட் சென்ற மாதக் கடைசியில், பி.பி.சி. வானொலி நிலையத்தி லிருந்து ஒரு ஒலிபெருக்கிப் பிரசங்கம் செய்தார். அதில், விமானத் தாக்குதல்களைக் குறித்துப் பேசும் போது, கூறியதாவது:—"வெடி குண்டு விமானங்களி லிருந்து வெடி குண்டுகளை சாதாரணமாக எறிவது தான் அவர்கள் செய்யும் வேலை யென்று எண்ணிக் கொண்டிருந்த காலம் மாறி விட்டது. ஆனல், மகா சிக்கலான முறையில், மிகுந்த ஆராய்ச்சியோடு திட்டம் வகுத்த பிறகு தான் தாக்க வேண்டு மென்னும் புதிய முறையில் பிரிட்டிஷ் விமானப் படையினர் மிகுந்த தேர்ச்சி பெற்றிருக்கின்றனர். இந்த முறையைக் கையாளுவதன் பயனாகத் தான், கடுமையாக நம் விமானங்கள் தாக்குவதனல், கடைசி யுத்தத்திற்கு ஜெர்மனி தன்னை ஆயத்தப் படுத்திக் கொண்டிருக்கிறது. நாம் எவ்வளவு கெட்டிக்காரத் தனமாக வெடி குண்டுகளை எறிகிறோமோ, அவ்வளவு விரைவில் பரிபூரண வெற்றி கிடைக்கும், உயிர்ச் சேதமும் அதிகமாயிராது. நேச நாட்டுப் போராயுதங்களில், வெடி குண்டு தலை சிறந்த ஆயுதமாக விளங்குகிறது. நெருக்கடியான யுத்த காலத்தில், வெடி குண்டுகளைத் தாராளமாகப் பயன்படுத்துவதை ஆதரிக்கத் தான் வேண்டும்."

வெடிகுண்டுகளை விமானங்களிலிருந்து எறிவது ஒரு யுத்த தந்திர முறை. முதலாவதாக, ஏராளமான பிரிட்டிஷ் வெடிகுண்டு விமானங்கள் கிளம்பி, ஜெர்மனியிலுள்ள தரை யரண்களைத் தகர்த்து பொடி செய்தன. இதனல் விமானங்களுக்கு நேரக்கூடிய சேதம் குறைந்தது. ஆனல் அதன் பலன் அதிகப்பட்டது. அப்போது எதிரி தன் போர் விமானங்களைக் கொண்டும் பேரொளியைக் கொண்டும் போராடி, பிரிட்டிஷ் விமானங்களைக் கலைத்துக் கூடுமான வரை பெரும் நஷ்டத்தை உண்டாக்க முயற்சித்தார்கள். இவர்கள் எண்ணம் பலிக்கவில்லை. நமது வெடிகுண்டு விமானங்கள், 'மஸ்கிடோ' விமானங்களைக் கொண்டு, ஜெர்மன் போர் விமானங்களை நாசம் செய்தன. இதன் பயனாக ஜெர்மன் போர் விமானங்கள் பறக்கவும் முடியாமல் திண்டாடின.

இந்த வருஷக் கோடை காலத்திலும் அதற்கு பிறகும் பிரிட்டிஷ் படையைச் சேர்ந்த வெடிகுண்டு விமானங்கள் நடத்திய போராட்டத்தை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். (1) ரூர் பிரதேச யுத்தம். (2) ஹாம்பர்க் யுத்தம். (3) பெர்லின் யுத்தம். ரூர் பிரதேசத்தில் முக்கியமான குறிகள் எஸ்ஸென், குயிஸ்பர்க், டோர்ட்மண்டு, டஸ்ஸெல்டார்ப், போச்சும், செராசன், உப்பர்டால், முலீம், க்ரெபெல்ட் ஆகியவை. வெடிகுண்டுகளை படிப்படியாக அதிகமாகவே எறிந்து பிரிட்டிஷ் வெடிகுண்டு விமானங்கள் தாக்கிக் கொண்டிருந்தன. முதன் முதல் 1,000 டன் வெடிகுண்டு எறியப்பட்ட முதல் பட்டணம் ரூர் தான். இது மார்ச்சு மாதம் 12-ம் தேதி நடந்தது. மறு மாதம் அதாவது ஏப்ரல் மாதம் 26-ம் தேதி 1,000 டன் பிரிட்டிஷ் வெடிகுண்டு டூயிஸ்பர்க் மீது எறியப்பட்டது. டார்ட்மண்டு மீது மே மாதம் 24-ம் தேதியும், டஸ்ஸெல் டார்ப் மீது ஜூன் மாதம் 11-ம் தேதியும் 2,000 டன் பிரிட்டிஷ் வெடிகுண்டுகள் எறியப்பட்டன.

பிறகு தான் ஹாம்பர்க் யுத்தம். ஜுலை மாதம் 24-ம் தேதிக்கு மேல் ஆகஸ்டு மாதம் 2-ம் தேதிக்குள் இந்தப் பட்டணம் 8 முறை தாக்கப்பட்டது. இங்கே ஏராளமான விமானங்களைக் கொண்டு இடைவிடாது தாக்கினர்கள். அப்போது பிரிட்டிஷ் வெடிகுண்டு விமானங்களில் 4 மட்டும் சுமார் ¾ மணி நேரத்திற்குள் தலா 2,000 டன் வெடிகுண்டுகளை எறிந்திருக்கின்றன. அன்றியும், அமெரிக்க வெடிகுண்டு விமானங்கள் 2-ம், பிரிட்டிஷ் 'மஸ்கிடோ' விமானங்கள் 2-ம், தலா 2,000 டன் வெடிகுண்டுகளை அங்கே எறிந்தன.

இனி பெர்லின் யுத்தத்தைப்பற்றி கவனிப்போம். ஹாம்பெர்க் நகரத்தில் வெற்றியோடு கையாளப்பட்ட யுத்த தந்திரம் இங்கேயும் கையாளப்பட்டது. பெர்லின் யுத்தம் ஆகஸ்டு மாதம் 12-ம் தேதி ஆரம்பமானது. செப்டெம்பர் மாதம் 4-ம் தேதிக்குள் 10 முறை தாக்கப்பட்டது. இவற்றுள் 7 'மஸ்கிடோ' விமானங்கள் தாக்கியது. மூன்று, இரவுகளில் தாக்கும் வெடிகுண்டு விமானங்கள். ஹாம்பெர்க்குக்கும் பெர்லினுக்கும் சுமார் 150 மைல் தூரம். என்றும், பிரிட்டனிலிருந்து கிளம்பிய விமானங்கள் பெர்லின் நகரத்தின் பலமான அரண்களைத் துளைத்துக் கொண்டு போய் ஹிட்லரின் தலை நகரத்தை மிகக் கடுமையாகத் தாக்கின. இவ்வளவு கடுமையாக பெர்லின் தாக்கப்பட்டதே கிடையாது என்று சொல்லலாம். இதனல் ஆட்களுக்கும் இயந்திரங்களுக்கும் ஏற்பட்ட நஷ்டம் மிகக் கொஞ்சம்.

இவ்வளவு கடுமையாக பிரிட்டிஷ் விமானப் படைகள் ஜெர்மன் கைத்தொழிற் பகுதிகளைத் தாக்கியதனுல் ஜெர்மனியில் விமானங்கள் உற்பத்தி செய்வதை விட்டு தற்காப்பில் கவனம் செலுத்தவேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது. போர் விமானங்கள் கட்டவேண்டியதில் தம் முழு கவனத்தையும் செலுத்த வேண்டியவர்களானுர்கள். சென்ற மாதக் கடைசியில் இரவில் தாக்கச் சென்ற பிரிட்டிஷ் விமானிகளை, இதற்கு முன்பில்லாத அளவிற்கு போர் விமானங்களைக் கொண்டு எதிரிகள் எதிர்த்ததாகத் தெரிகிறது. ஜெர்மானியர்களின் விமான பலம் சற்று அதிகப்பட்ட போதிலும், பிரிட்டிஷ் விமானங்கள் தம் வேலையை ஜெர்மனியில் சரிவரச் செய்துவிடுகின்றன.

சொந்தப் பாடம் தானே?

நேச தேசத்தார் ஸிஸிலியைப் பிடித்துவிட்டார்கள்; இனி இத்தாலிக்கு ஆபத்து ஏற்படுவது நிச்சயம் என்பதை உணர்ந்தார் இத்தாலிய அரசாங்கத்தின் தலைவராக இருந்த மார்ஷல் படாக்ளியோ. ஆகஸ்டு மாத மத்தியிலேயே, அவர் பிரிட்டிஷ் சர்க்காரோடு பேசத் தொடங்கிவிட்டார். 'ஐயா! நீங்கள் இத்தாலியில் இறங்கினதும், நானும், இத்தாலிய அரசாங்கமும் உங்கள் பக்கம் சேர்ந்துவிடுகிறோம்' என்றுர் அவர். இந்தத் தகவலை ஒரு இத்தாலிய படைத்தலைவர் நடு நிலைமை நாடான போர்ச்சுகலில் போயிருந்து கொண்டு, பிரிட்டிஷ் பிரதிநிதி ஒருவரிடம் தெரிவித்திருக்கிறுர்.

'அப்படியானுல் நீர் நிபந்தனையின்றி சரணடைய வேண்டும். பிறகு நாங்கள் சொன்னபடியெல்லாம் செய்யவேண்டும்' என்று ஜெனரல் ஐஸன்ஹோவரிடமிருந்து சென்ற பிரதிநிதி கூறியிருக்கிறுர் இத்தாலியப் பிரதிநிதியிடம். அதோடு, யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைக் குறித்து ஐஸன்ஹோவர் என்று அறிக்கை விடுகிறுரோ, அன்றே இத்தாலியும் யுத்தத்திலிருந்து விலகி விட்டதாக உலகோருக்கு அறிவிக்க வேண்டும் என்றும் அதே பிரதிநிதி கூறினுர். ஆனுல் ஐஸன்ஹோவர் என்றையத்தினம் தமது அறிக்கையை வெளியிடுவார் என்பது மட்டும் இத்தாலியருக்குத் தெரிவிக்கப்படவில்லை.

அந்தப் பிரதிநிதி படாக்ளியோவைக் கலந்து கொள்ள ஓடினுர். 'ஐயோ! நாங்கள் சுயேச்சையாக இருந்தால், நீங்கள் சொல்லுகிறபடியெல்லாம் கேட்போமே! எங்கள் கழுத்திலே கை வைத்துக் கொண்டு, எங்களை அங்கே இங்கே திரும்பவிடாதபடி செய்து கொண்டு உட்கார்ந்திருக்கிறுர்களே ஜெர்மானியர்! நேச தேசத்தார் பெருவாரியாக வந்து இத்தாலியில் இறங்கிய பின் தான் யுத்த நிறுத்த அறிக்கையை இத்தாலி வெளியிடமுடியும்? எங்கள் நிலைமையைக் கவனித்து, செய்வதைச் செய்யுங்களய்யா!' என்று சொல்லி அனுப்பினுர் படாக்ளியோ.

சொன்னுல் சொன்னதுதான்?

"நாங்கள் சொன்னுல் சொன்னது தான்! இன்னும் இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் 'எஸ்' ஸா, 'நோ' வா, பதில் வேணும்!" என்று நேச தேசத்தார் இத்தாலியப் பிரதிநிதியிடம் கூறிவிட்டார்கள்.

இத்தாலிக்கு தப்ப வழியில்லை. மறுநாள், அதாவது செப்டம்பர் மூன்றுந் தேதி இத்தாலிய தூதர் கையெழுத்துப் போட வந்து விட்டார். ஜெனரல் ஐஸன்ஹோவர், ஜெனரல் அலெக்ஸாந்தர் ஆகிய இருவரது முன்னிலையில் நேச தேசப் பிரதிநிதியும், இத்தாலியப் பிரதிநிதியும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டுவிட்டார்கள்.

ஆனுல், செப்டெம்பர் எட்டாந் தேதி, (நமது மணி) ராத்திரி பத்து மணிக்குத்தான் இந்த விஷயம் வெளியிடப்பட்டது. அதற்கப்புறம் பத்தரை மணி நேரம் கழிந்துத்தான், நேச தேசப் படைகள் நேபிள்ஸ் துறைமுகத்தருகே போய் இறங்கின. அப்புறம் நடப்பது தான் தெரிந்த விஷயமாச்சே!

இத்தாலி சரணடைந்ததில் ஒரு பெரிய விசேஷமிருக்கிறது. ஒரு ரகசிய த்தைப் பாதுகாப்பதில் படாக்ளியோ 'படா' சூரர் எனப் பெயர் பெற்று விட்டார்.

செப்டம்பர் 3-ந் தேதி வெள்ளியன்று கையெழுத்தான ஒரு விஷயத்தை, உலகோருக்கும், கழுகு போல் காத்திருக்கும் ஹிட்லர் கோஷ்டிக்கும் கடுகளவு கூட ஒரு வாரம் வரை தெரியாது செய்துவிட்ட அவரல்லவா சூரர்? அதோடு நின்றுரா? 'இத்தாலியர் கடைசி மூச்சு இருக்கும் வரை ஒரு கை பார்த்தே விடப் போகிறுர்கள்!' என்று வேறே விடாது சொல்லிக் கொண்டிருந்தார். இதை விட ஜகப் புரட்டு வேறு இல்லவே இல்லை என்பதை எதிர் கால சரித்திரக்காரர்கள் எழுதாது விடப் போகிறுர்களா என்ன?

பெரிய கைக்கார வேலை

அதுமட்டுமா? ஒரு புறம் நேச தேசத்தாரோடு சமாதானம் செய்து கொண்டுவிட்டு, இன்னொரு புறம் ஜெர்மானியப் படைகளில் சிலவற்றை, நேச தேசத்தார் நன்ருக உதைத்து வாட்டக் கூடிய இடங்களுக்கு வரும்படியும் இத்தாலியர் ஏமாற்றி இழுத்துக்கொண்டு விட்டார்கள் என்றும் கூறப்படுகிறது. பெரிய கைக்கார வேலை தானிது.

படாக்ளியோவிற்கு இத்தாலிய அரசர் முதல் சகலரும் பூரண உதவி அளித்திருக்கிறுர்கள். படாக்ளியோ, சமாதான ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்ட அன்று, அவரே ரோமாபுரியிலிருந்த ஜெர்மன் தூதரிடம் சென்று, 'நான் என்றும் காட்டிக் கொடுக்கவே மாட்டேன். இத்தாலி குப்புற விழவே விழாது' என்று கூறினுராம.

'இல்லையே ஐயா! ஏதோ சாமாதானப் பேச்சு நடக்கிறதாமே!' என்று ஜெர்மன் தூதர் கேட்டாராம்.

'அது அசல் பிரிட்டிஷ் பிரசாரப் புளுகய்யா! அதை நம்பாதீர்!' என்றுராம் படாக்ளியோ.

அப்புறம், ஆகஸ்டு எட்டாந்தேதி யன்று கூட, இத்தாலிய மன்னர், ஜெர்மன் தூதரைச் சந்தித்து, 'இத்தாலி சரணடையவே அடையாது' என்றுராம். ஆனுல் அதற்கப்பால் கால் மணி கூட கழியவில்லை. 'இத்தாலியரே! நிறுத்துங்கள் போரை! நாம் நேச தேசத்தார் பக்கம் சேர்ந்து விட்டோம்! ஜெர்மானியர் இனி நமது விரோதிகள்!' என்று இத்தாலிய ரேடியோக்கள் அலறத் தொடங்கி விட்டனவாம். பலே தமாஷ் தான் இது!

இதை எண்ணி எண்ணித் துடிக்கிறுர் ஹிட்லர். 'அயோக்யத்தனம்! அக்ரமம்! கொலைகாரத்தனம்! கோழைத்தனம்!' என்றெல்லாம் கொட்டுகிறுர் வார்த்தைகளை. "இவ்வளவு நாட்களாக ஒன்றுகக் குலவாடிக் கொண்டிருந்துவிட்டு, இப்படி, சொல்லாமல் கொள்ளாமல் 'பல்டி' அடித்தது சரியா?" என்று கோபத்தோடு கேட்கிறுர்.

இவ்வாறு ஏமாந்த சோணகிரியாகி, தன்னந்தனியே ஐரோப்பாவிலே நிற்கும் ஹிட்லரது கேள்விக்கு ஒரே பதில் சொல்ல விரும்புகிறோம்.

தீட்டின மரத்திலே கூர் பார்க்கிறுர்.

ஐயா! ஹிட்லரே! இதிலே புதுமை என்ன இருக்கிறது? இது உங்கள் சொந்தப் பாடம் தானே? உம்மிடத்தில் கற்ற பாடத்தை இத்தாலியர் உம்மிடமே காட்டியிருக்கிறுர்கள்! கோபம் வருவதற்கு இதிலென்ன இருக்கிறது? அச்சு நாட்டாரின் சொந்தப் பாடம் இது என்பதை அதற்குள்ளாகவா நீர் மறந்துவிட்டீர்? இந்தப் பாடம் உங்களுக்கு மட்டும் 'காபிரைட்'டா என்ன?" என்பதே நாம் கேட்க விரும்பும் கேள்வி.

ஜெர்மனியின் கூட்டாளியான ஜப்பான் என்ன செய்தது? ஜப்பானியப் பிரதிநிதிகள் அமெரிக்காவிலே போய், கூட்டுறவுப் பேச்சுக்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். அதே சமயத்தில் தானே, ஜப்பானிய விமானிகள் முத்துத் துறை முகத்தை நொறுக்கித் தள்ளினுர்கள்? முன்னெச்சரிக்கையின்றி, திடுதிப்பென்று தானே, சிங்கப்பூர் அருகே யிருந்த இரு பிரமாண்டமான பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்களை பலி கொண்டார்கள்? அந்தக் காரியங்களை, ஹிட்லரே நீர் கண்டித்தீரா ஐயா?

நீர் ஐரோப்பாவில் செய்திருக்கும் காரியங்கள் எல்லாம் ரொம்ப நியாயமான காரியங்களா என்ன? போலந்து தேசத்தைப் பொடிப் பொடி யாக்கினீரே! பிரான்ஸ் தேசத்தை பிளந்து தள்ளினீரே? எத்தனை சிறிய நாடுகளை ஏப்பம் விட்டுவிட்டு உட்கார்ந்திருக்கிறீர்? எத்தனை ஆயிரம் பேர்களை இதமாகப் பேசி, துப்பாக்கி முனையில் வைத்து சுட்டுத் தள்ளினீர்?

உமது சகாவாக இருந்த முஸோலினி செய்ததெல்லாம் யோக்யமான காரியமா? அவரைப் போன்ற உத்தமர் இல்லை என்று அவருக்குப் பட்டம் கொடுப்பது ரொம்ப சரியோ? அவர் அபிஸினியாவையும், அல்பேனியாவையும் அபகரித்ததும், பிரான்ஸின் முதுகிலே குத்தத் துணிந்ததையும் கண்டு மகிழ்ந்தீரா நீர்?

இப்பொழுது, படாக்ளியோ உம்மிடம் ஒரு வாரம் ரகசியத்தை வெளியிடாதது கண்டதும் உமக்கு எவ்வளவு ஆத்திரம் வருகிறது? உம்மைப் போல் தானே, மேலே சொன்ன நாடுகளில் உள்ளவர்கள் எல்லாம் பொங்கிக் கொதித்திருப்பார்கள்? வேணும் உமக்கு நன்ருக! படாக்ளியோவிற்கு ஒரு 'சபாஷ்!' கொடுக்கவேண்டியது தான்! நல்லவர் கூட்டம் என்றும் கலையாதிருக்கும்; திருட்டுக் கூட்டம் இவ்வாறு தான் அப்படி அப்படியே சிர்குலைந்து போகும் என்பதைத் தெரிந்து கொள்ளும். இன்னும் இருக்கிறது உமக்கு பல கதைகள்! உமது பிடியில் அகப்பட்டுள்ள சிறு நாடுகள் எல்லாம் உமது கண்களை வெகு சீக்கிரத்திலே குத்தப் போவதை நீரே பார்க்கப் போகிறீர். அப்புறம உமது முடிவு காலம் அதி தூரத்திலிராது. அது வரை ஆடும்! நன்ருக ஆடும்! அணையும் விளக்கு பிரகாசமாக எரிந்து தானே அணைய வேண்டும்? உம்மைப் போல், திடுதிப்பென்று அற்பப் பதவியிலிருந்து அந்தரத்திற்கு உயர்ந்திருக்கிறுர்கள் பலர். அவர்கள் கதைகளை யெல்லாம் நீர் வாசித்ததில்லை போலிருக்கிறது. ஒருவராவது மேலே தங்கியதில்லை. தலை குப்புறத்தான் விழுந்து மறைந்து போயிருக்கிறுர்கள். அதை விட வேறு முடிவு உமக்கு இருக்க முடியாது! அதை நன்ருகத் தெரிந்து கொள்ளும்.

மதராஸ் படைகளின் மகிழ்ச்சி

இழ்க்கண்ட கடிதத்தை ஒரு இராணுவ 'வெல்பேர்' உத்தியோகஸ்தரான காப்டனும், இராணுவப் பயிற்சி சாலைத் தலைவரான ஒரு கர்னலும் கையொப்ப மிட்டு, சென்னை யுத்த உதவிக் கூட்டுக் கமிட்டியின் கௌரவக் காரியதரிசிக்கு அனுப்பி யிருக்கிறுர்கள்:—

"எங்கள் மதராஸ்காரர்களுக்காக, மூன்று பெட்டிப் புத்தகங்கள் கிடைக்கப் பெற்றோம். இது பற்றி பெரிதும் மகிழ்ச்சி யடைகிறோம்."

"அவற்றை இப்போது தான் 'பாட்டரி வெல்பேர் ரூம்ஸ்'க்குக் கொண்டு போய்க் கொடுத்தேன். அப்போது எங்கள் ஆட்கள் மிகவும் மகிழ்ச்சி யடைந்தார்கள்."

"நீங்களும் உங்கள் ஸ்தாபனமும் எங்களுக்குப் பல வகைகளில் உதவியிருக்கிறீர்கள். அவற்றை நாங்கள் எவ்வளவு நன்றியறிதலோடு பாராட்டுகிறோமென்று அறிவிக்கும்படி, இந்தப் படையின் தலைவரும் உத்தியோகஸ்தர்களும் என்னைக் கோரினுர்கள். மதராஸ்காரர்கள், அணி வகுப்பில் இல்லாத காலத்தில், அவர்கள் மகிழ்ச்சி யோடிருக்கும்படிச் செய்ய எங்களால் ஆன வரை முயற்சிக்கிறோம். இதில் நாங்கள் வெற்றி யடைகிறோம் என்று தான நான் நினைக்கிறேன்."

"இந்தப் படையில் ஏராளமான சிப்பாய்கள் இருக்கிறுர்கள். அவர்கள் எல்லோரும் பீரங்கிப் பயிற்சி வெகு நன்ருகப் பெற்றுக் கொண்டு வருகிறுர்கள்."

யுத்த முயற்சியும் வாசக சாலைகளும்

சென்னை வானொலி நிலையத்திலிருந்து செப்டெம்பர் மாதம 15-ம் தேதி சங்கு கணேசன் அவர்கள் "யுத்த முயற்சி" என்னும் தொடரின் கீழ் செய்த ஒலி பெருக்கிப் பிரசங்கமாவது :—

யுத்தம் நல்லதா ? சண்டை நடந்து கொண்டிருக்கும் போது இந்தக் கேள்விக்கு இட மில்லை. யுத்தம் நடந்து வருகிறது. அதைப் பொது நன்மைக்கு எப்படி உபயோகித்துக் கொள்ளலாம். புத்திசாலிகளாக இருக்கிறவர்கள் இப்பொழுது யோசிக்க வேண்டியது இது தான். யுத்தத்தினால் நாசங்களுண்டு. அதே சமயத்தில் நற்காரியங்களும் உண்டு. நாசங்கள் தவிர்க்க முடியாதவை. நன்மைகளோ புத்திசாலித்தனத்தினால் அதிக நன்மைக்கு பயன் படுத்திக் கொள்ளக் கூடியவைகள். ஆகையால் அப்படி பயன்படுத்திக் கொள்ளக்கூடிய நன்மைகள் என்னென்ன என்பதையே நாம் யோசிக்க வேண்டும்.

யுத்தத்தில் பலர் சிப்பாய்களாய் இருக்கிறார்கள். தொழிற் சாலைகளில் அதிகத் தொழிலாளிகளுக்கு வேலை கிடைத்திருக்கிறது. இந்தியாவில் வேலையின்றிக் கஷ்டப்பட்ட ஏழை ஜனங்களைப் பொருத்த வரையில், அவர்களுக்கு வேலை கிடைத்திருக்கிறது. இதனால் அந்த ஏழைகளின் பொருளாதார நிலைமை உயர்ந்திருக்கிறது.

சமூகத் துறையிலும் முக்கிய நன்மை

அதே சமயத்தில், சமூகத்துறையிலும் மற்றோர் முக்கிய நன்மை ஏற்பட்டிருக்கிறது. யுத்த சேவையில் ஒருவரை யொருவர் நெருங்கி வாழும் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. தீண்டத் தகாதவன் என்பவனும் உயர்ந்த ஜாதி யென்று இறுமாப்புக் கொண்டிருந்தவனும் ஒரு லட்சியத்தில் ஒரே முனையில் ஒன்று பட்டு நிற்கும் அவசியம் உண்டாகிறது. இதனால் அவர்களிடை அந்நியோன்யம் வலுக்கிறது. ஜாதிப் பகைமை பறக்கிறது. இந்தியாவின் க்ஷேமத்திற்கு இது மிகவும் முக்கியம். இந்த அவசியமான மாறுதலை யுத்த சேவை அளிக்கிறது.

இதிலிருந்து பிறக்கும் மற்றோர் நன்மையும் முக்கியமானதே. யுத்த சேவையில் அதிக ஜனங்கள் ஈடுபடுவதால் அவர்கள குடும்பங்கள் அதிக வருமானத்தை அடைகின்றன. சமூகத்தில் உயர்வு தாழ்வு இருக்கும்படிச் செய்வது பணம். பெரியவன் சின்னவன், படித்தவன் பாமரன் என்ற வித்தியாசம் இருக்க உதவியாயிருப்பது பணம். பணம் இருந்தால் படிக்க வசதி யுண்டு. பட்டினி குறைந்தால், அறிவு வளர்ச்சிக்கு அதுவே மார்க்கம். ஆகையால் ஏழைப் பிள்ளைகள் படிக்கவும், பட்டினியின்றி அவர்கள் உடலும், அறிவும் வளரவும் சந்தர்ப்பங்கள் உண்டாகின்றன. இத்தகைய காரணங்களால் சமூகத்தில் ஒரு தனி உயர்வு ஏற்பட சாத்தியமாகிறது. கல்வி பெருகுகிறது. அதே சமயத்தில் அந்த மக்களின் உடல் வலிவும் வளருகிறது. ஆகையால் யுத்தத்தின் காரணமாக யுத்த சேவையில் ஈடுபடுகிறவர்களின் சேவையின் பலனாக, சமூகம் அடையும் நன்மைகள் இவையாகும்.

ஒன்றுத்துவம் பரவ வேண்டும்

வாசகசாலைகளுக்குப் போகிறோம். அங்கு ரேடியோவிலோ. பத்திரிகைகளிலோ யுத்தச் செய்திகளைக் கேட்கிறோம். செய்திகளைப் பார்க்கும் போது, கேட்கும் போது அங்கிருப்பவர்களின் கவனம் ஒன்றையே நாடுகிறது. அந்த ஒன்றுத்துவம் பிறவற்றிலும் பரவ வேண்டும். அது தான் ஒரு நாடு க்ஷேமம் அடைய வழி. நாட்டு மக்கள் செழிக்கத்தக்க மார்க்கம். ஆகையால் அந்த ஒன்றான மனதை, ஒற்றுமை மனப்பான்மையை வளர்க்க வேண்டும். இதற்குரிய சாதனங்களை நாம் நாடி வளர்க்க வேண்டும். சாதாரண மக்கள் இருக்கு மிடங்களில் வாசகசாலைகள் பெருக வேண்டும். அங்கு பத்திரிகைகள் அதிகமாகக் கிடைப்பதுடன் படிக்கத் தெரியாதவர்கள் கூட யுத்தச் செய்திகளை அறிய ஆவலுடன் இருப்பதால் அவர்களுக்கும் அன்றாடச் செய்திகள் தெரிய வசதிகள் செய்ய வேண்டும்.

இப்பொழுது ஆங்காங்கு கிராமங்களில் வாசகசாலைகள் இருக்கின்றன. இந்த வாசகசாலைகளின் பலன் என்ன ? அவற்றை எப்படி சமூகத்திற்கு மாத்திரமன்றி ஒவ்வொரு குடும்பத்திற்கும் நன்மையான முறையில் உபயோகித்துக் கொள்வது ? இந்த இரண்டு விஷயங்களைப் பற்றியே நாம் இப்போது கவனிக்க வேண்டும்.

ராமன் ஆண்டால் என்ன ? ராவணன் ஆண்டால் என்ன ? என்று இருக்கக்கூடிய காலம் இது அல்ல. அப்படி இருப்பவர்கள் யாராவது இருந்தால், கிணற்றுத் தவளைகளைப் போலத்தான் இருக்க நேரிடுவதோடு அப்பாவிகள் என்ற பட்டமும் தான் நமக்குக் கிடைக்கும். படித்தவர்கள் ஆனாலும் சரி பாமரர்களாக இருந்தாலும் சரி ; விஷய ஞானம் அதிக அவசியம்.

விஷய ஞானம் இருக்க வேண்டுமானால், உலகத்தில் நடக்கிற விஷயங்கள் தெரிய வேண்டும். வீட்டுத் திண்ணையில் முழங்காலை கட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தால், விஷய ஞானம் நம்மைத் தேடி வராது. அதைத் தேடி நாம் ரயிலேறி பயணம் போக வேண்டியதும் இல்லை. பக்கத்திலிருக்கும் வாசகசாலைகளுக்குப் போகலாம். இதற்கு பணச் செலவு இல்லை. கிராம வாசகசாலைகளில் கிடைக்கும் பத்திரிகைகளை படிக்கலாம். ஓய்ந்த நேரத்தில் ஊர் வம்பு பேசி உள்ளூர் மனஸ்தாபங்கள் இல்லாமல் இருப்பதற்கு இது சரியான வழி. கைக்காசு செலவின்றி உலகத்தின் நிலைமையைத் தெரிந்துக் கொள்வதற்கும் இதனால் சௌகரியம் ஏற்படுகிறது.

ஒரு நாட்டின் குறையால் பிற நாடுகளுக்கும் பாதகம்

குக்கிராமத்தில் காலந்தள்ளுகிறவர்களுக்கு உலக விவகாரம் என்னத்திற்கு என்று சிலர் நினைக்கலாம். அப்படிப்பட்ட நினைப்பு அநேகருக்கு இன்னும் இருக்கிறது. இந்தியாவில் இன்றிருக்கும் அநேக குறைபாடுகளுக்கு நம் ஜனங்களிடையே இருக்கும் இந்தக் குறைபாடும் ஒரு காரணம். உலகத்தில் ஒரு நாடும் மற்றொரு நாடும் தூரத்திலிருக்கலாம். ஆனால் காலத்தின் மாறுதல், போக்கு வரத்து வசதிகள், உலகச் சமாதானத்தின் முக்கியம் ஆகியவைகள், நாடுகள் தூரத்திலிருந்தாலும் அவைகளுக்குள்ளே உள்ள சம்பந்தத்தை நெருக்கத்தில் கொண்டு வந்து விட்டன. ஆகையால் ஒன்றுக் கொன்று எவ்வளவு தூரத்திலிருந்தாலும் ஒரு நாட்டில் ஏற்படும் ஒரு நிலைமை மற்றொரு நாட்டை பாதிக்காமல் இருக்காது. ஒரு நாட்டினருக்கு ஏற்படும் நன்மை தீமைகள் மற்றொரு நாட்டைப் பற்றாமல் இருக்காது. அதோடு அபிவிருத்தி அடைந்த நாடுகளுடன் நாமும் அபிவிருத்தி அடைய வேண்டும். அப்படி அபிவிருத்தி அடையவில்லையானால் இந்நாட்டு மக்கள் சுபீக்ஷத்துடன் வாழ முடியாது. ஆகையால் உலக விவகாரம் தெரியத்தான் வேண்டும். தெரிந்துக் கொள்ளாமலும் இருக்கலாம் என்று நினைப்பது தவறு, முட்டாள் தனம். ரஷ்யாவின் நிலைமையை யோசித்துப் பார்த்தால் இதிலிருக்கும் சூக்ஷமம் நன்கு விளங்கும்.

ரஷ்ய முன்னேற்றத்தைப் பாருங்கள்

சென்ற யுத்த காலத்திற்கு முன்பு ரஷ்யாவில் படிப்பற்றவர்கள் ஏராளமாக இருந்தார்கள். தங்கள் தேசத்திலோ உலகத்திலோ என்ன நடக்கிறது என்பதைப் பற்றி அக்கரைக் கொள்ளாதவர்களாகவும் இருந்தார்கள். ஐரோப்பாவில் பிற்போக்கான மக்கள் என்ற பெயரை எடுத்தார்கள். ஏழ்மையில் வாடினார்கள். ரஷ்யப் புரட்சிக்குப் பிறகு நிலைமை முற்றிலும் மாறியது. படிக்காதவன் கிடையாது என்ற நிலைமையில் உண்டாயிற்று. உலகத்தை அறிந்தனர். அதன் பேரில் தங்கள் உயர்வதற்கு வழி என்ன என்பதையும் உணர்ந்தனர். பட்டினி நீங்கிற்று. அறிவு வளர்ந்தது. வலுவு பெருத்தது. ரஸாயன, கைத்தொழில் ஞானம் ஓங்கிற்று. கொடிய ஹிட்லரின் ஆயுத பலத்தையும் படை பலத்தையும் தவிடு பொடியாக்கி தங்கள் வீரப் பிரதாபத்தைக் கண்டு உலகமே போற்றும்படி செய்து வருகிறார்கள்.

உலக விவகாரம் நமக்கு எதற்கு. நாம் ஏன் அதைத் தெரிந்துக் கொள்ள வேண்டும் என்று ரஷ்ய மக்கள் எண்ணிக் கொண்டிருந்திருப்பார்களானால், அவர்கள் இவ்வளவு முன்னேற்றம் அடைந்திருப்பார்களா ? அவர்களுடைய புகழ் உலகத்தில் இவ்வளவு தூரம் பரவியாவது இருக்குமா ? கொடிய ஹிட்லர் படைகளை எதிர்த்து நாட்டின் சுதந்திரத்தைக் காக்கும் தீரமாவது அவர்களுக்கு இருந்திருக்குமா ? இருக்கவே இருக்காது.

ஆகையால் நாமும் இந்த நல்ல சந்தர்ப்பத்தில் நமக்கு என்ன என்று இருந்து விடுவோமானால், நாளைக்கு நாம் அடைய வேண்டிய அபிவிருத்தியை அடையவே மாட்டோம். சகல அபிவிருத்திக்கும் உலக ஞானம் நமக்கு முக்கியம. அந்த ஞானத்தை நமக்குச் செலவின்றி, சிரமமின்றி கிராம வாசக சாலைகள் அளிக்க காத்துக் கொண்டிருக்கின்றன. அவற்றை உபயோகித்துக் கொள்ள வேண்டியது தான் நாம் செய்ய வேண்டியக் காரியம்.

யுத்த நிகழ்ச்சிகளைத் தெரிந்து கொள்ள வேண்டும்

யுத்த நிகழ்ச்சியை நாம் அப்போதைக் கப்போது தெரிந்துக் கொள்ளத் தான் வேண்டும் என்பதற்கு மற்றோர் காரணமும் இருக்கிறது. நம் சகோதரர்கள், நம் குழந்தைகள், உற்றார் உறவினர்கள் இந்த யுத்தத்தில் பல வழிகளில் ஈடுபட்டிருக்கின்றனர். அவர்கள் இரவு பகல் பல தியாகங்களைச் செய்து வருகிறார்கள். யாருக்காக ? நம் நாட்டு பாதுகாப்புக்காக, உலக அமைதிக்காக. ஆகையால் நம்மவர்கள் ஈடுபட்டுவரும் போர் அன்றாடம் அடையும் அபிவிருத்தியை நாம் அறியவேண்டாமா ? எதுவானால் என்ன என்று சிலர் இருக்கலாம் ; அது புத்திசாலித்தனம் அல்ல.

பாடு படாதவன், பின்னால் லாபத்தில் பங்குக்கு நிற்க யோக்கியதை இல்லை. நின்றாலும் பாடு பட்டவன் முன்னால் மனம் குன்றிக் கூசித்தான் நிற்க நேரும். ஆகையால் யுத்த முயற்சிப்பாட்டில் நாமும் பங்கு எடுத்துக் கொள்ள வேண்டும். பங்கு எடுத்துக் கொள்ள இயலாதவர்கள் பங்கெடுத்துக் கொண்டிருப்பவர்களைப் பற்றியும் அவர்கள் செய்யும் வீரப் போரின நிலவரத்தையும் ஆவலோடு தெரிந்துக் கொள்ளவாவது வேண்டும். அதைத் தெரிந்துக் கொள்ள ஏற்ற சாதனமாக வாசகசாலைகள் அமைந்திருப்பதால் இந்த நல்ல சந்தர்ப்பத்தை இழப்பது கூடாது.

ரஷ்யாவிற்கு உதவி: சென்னை கொடுத்த தென்ன?

லண்டன் ரஷ்ய உதவி நிதிக் கமிட்டித் தலைவரான ஸ்ரீமதி க்ளெமெண்டைன் சர்ச்சில், சென்னை யுத்த உதவிக் கூட்டுக் கமிட்டித் தலைவருக்குக் கீழ் கண்டவாறு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார் :—

இப்போது தான் இந்திய இம்பீரியல் பாங்கி மூலம் £ 900 வரப் பெற்றேன். அது பற்றி கீழ்க் கண்ட தந்திச் செய்தியைத் தங்களுக்கு அனுப்பி இருக்கிறேன் :—

"என்னுடைய ரஷ்ய உதவி நிதிக்கு மேலும் £ 900 நீங்கள் அனுப்பியது இப்போது தான் கிடைத்தது. அது பற்றி நான் பெரிதும் நன்றி செலுத்துகிறேன். நமது ரஷ்யத் தோழர்களுக்கு இத் தொகையை மேலும் அனுப்புவதில் பங்கு கொண்டவர்களுக்கும், உங்கள் கமிட்டியாருக்கும் என் மனமார்ந்த நன்றி செலுத்துகிறேன்."

"ரஷ்யர்களுக்கு உதவிபுரியும் பொருட்டு இவ்வளவு பெருந் தொகையை நீங்கள் திரட்டியது பற்றியும், இன்னும் திரட்டிக் கொண்டிருப்பது பற்றியும், நீங்கள் செய்திருக்கும் பல உதவிகளை முன்னிட்டும் உங்கள் கமிட்டியாரிடம் நான் எவ்வளவு நன்றியறிதலோடிருக்கிறேன் என்று வாய்விட்டுச் சொல்லுவதற்கில்லை. இந்த £ 900-க்கு முன்பு அதாவது 12 மாதங்களுக்கு முன்னதாக அனுப்பியதையும், சேர்த்துக் கணக்கிட்டால், £ 2.600-க்கு ஒரு உண்டியல் அனுப்பியிருக்கிறீர்கள். மிகச் சிறந்த தாராளமான உதவி தான் இது."

"அந்தத் தொகைக்கு உத்தியோக முறையில் ரசீது அனுப்பியிருக்கிறேன். தாங்களும் தங்கள் நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்களும் இது வரை செய்ததற்கும் இப்போதும் செய்து கொண்டிருப்பதற்கும் எனது மனமார்ந்த நன்றியை ஏற்றுக் கொள்ளுவீர்கள் என்று எனக்குத் தெரியும். அன்றியும், இப்போதும், இதற்கு முன்னும் இந்த உதவி நிதிக்குப் பணங் கொடுத்து உதவிய அனைவருக்கும் என் சார்பாக நன்றி செலுத்துமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். ரஷ்ய மக்களிடம் அவர்கள் கொண்டிருக்கும் கருணை மகத்தானதென்று நான் மதிப்பதாக அவர்களுக்கு அறிவிக்கக் கோருகிறேன்."

நொண்டியானார் முத்தண்ணா!

திருட்டுத்தனமாக வந்து பெண்ணை அடித்துக் கொண்டு போகப் பார்த்தான் மதுரை வீரன். அகப்பட்டுக் கொண்டான். உடனே அவனது காலை வாங்கி விட்டார்கள்.

ஊரிலே ஒரு போக்கிரி இருக்கிறான் என்றால், அவனது அட்டகாசத்தை சகிக்காதவர்கள் ஒன்று கூடும் பொழுதெல்லாம், 'இந்தப் பயலை சரியாக எங்கேயாவது மடக்கிக் கொண்டு, காலை ஒடிச்சிட்டாத்தான் எல்லாம் ஒழுங்காகும். அது வரைக்கும், பயல் வழிக்கு வரமாட்டான்' என்று பேசிக் கொள்ளுவதுண்டு.

ஹிட்லர் சாது என்று யாராவது சொல்லுவார்களா? அவரது முரட்டுச் செய்கைகளின் பலனாகத் தானே இன்று உலகமே யுத்த அரக்கன் கையில் சிக்கிக்கொண்டு திணறிக்கொண்டிருக்கிறது. பூமா தேவியின் உடல் மீதிலே, பல இடங்களிலே, அவளது மக்களின் ரத்தம் ஆறாகப் பாய்ந்து ஓடுகிறது. இத்தகைய நிலைமைக்கு இவ்வுலகைக் கொணர்ந்த ஹிட்லர் இவ்வளவு காலமாக தன்னையாரும் அடக்கமுடியாது என்ற எண்ணத்தோடுதான், தான் தோன்றித் தனமாக ஏதேதோ செய்து கொண்டிருந்தார். மதுரை வீரனுக்கு ஆன கதியும், ஊரிலே உள்ள போக்கிரிக்கு ஊரார் செய்ய விரும்பும் மரியாதையும் இப்பொழுது ஹிட்லருக்கு ஏற்படும்படி செய்துவிட்டார்கள் நேசதேசத்தார். அவரது 'கால்' ஒன்று அறுபட்டு விட்டது. சரியான முடமாகி விட்டார் அவர். ஆகவே, அவரது ஆர்ப்பாட்டங்கள் இனிக் குறைந்தே ஆகவேண்டும்.

ஹிட்லருக்கு, 'கால் ஒன்று அறுபட்டுவிட்டதா? எப்போ? எங்கே? யார் சொன்னா? எந்தப் பேப்பரிலே போட்டிருக்கு?' என்று நீங்கள் ஆச்சரியத்தோடு கேட்கக்கூடும்.

ஹிட்லருடைய தேகத்தைச் சுமந்து செல்லும் கால்கள் அல்ல, நாம் இங்கே குறிப்பிட்டது. சென்ற வாரத்திலே வந்ததே ஒரு அழகான செய்தி, அதுதானய்யா இத்தாலி சரணாகதி அடைந்த செய்தி, அதைக் குறித்தே சொல்ல வந்தோம்.

நேசதேசத்தார் ஸிஸிலியைப் பிடித்த சில தினங்களுக்கப்பால், எல்லா ஏற்பாடுகளையும் பரிபூரணமாகச் செய்துகொண்டு, இத்தாலி மீது பாய்ந்தனர். அவர்கள் பாய்ந்தது செப்டெம்பர் மூன்றாந் தேதி. அன்று தானே, இந்த உலக மகா யுத்தத்தின் நான்காவது ஆண்டு முடிவை நேச நாட்டினர் உத்சாகத்தோடு கொண்டாடிக் கொண்டிருந்தார்கள். ஜெனரல் ஐஸன்ஹோவர் மகா நிபுணர் தான். கணக்காக செப்டெம்பர் மூன்றாந் தேதிக்குள் முன்னேற்பாடுகளை முடித்துக்கொண்டு, இத்தாலியில் போய் நேச தேசப் படைகளை இறங்க வைத்துவிட்டார். அதே தேதியிலேயே, அமெரிக்காவிலே, வாஷிங்டன் நகரிலே, பிரதம மந்திரி சர்ச்சிலும், ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டும் ஆவலோடு கீழ்த்திசையை நோக்கிக் கொண்டு, நல்லதொரு செய்தியை எதிர்பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். அவர்களை ஏமாறச் செய்யவில்லை ஐஸன் ஹோவர்.

சர்ச்சிலும் ரூஸ்வெல்டும் அடைந்த சந்தோஷம்

'மார்ஷல் படாக்ளியோவின் பிரதிநிதியும், நம் பிரதிநிதியும் ஸிஸிலி மண் மீது நின்று, யுத்த நிறுத்த ஒப்பந்தப் பத்திரிகையிலே கையெழுத்துகள் நாட்டிவிட்டார்கள். இத்தாலி நிபந்தனையின்றி சரணடைந்துவிட்டது. இனி இத்தாலியர் நாம் சொன்னபடிதான் நடக்கப் போகிறார்கள்' என்ற தந்தி ஐஸன்ஹோவரிடமிருந்து பறந்தது. அதைக்கேட்டு, சர்ச்சிலும் ரூஸ்வெல்ட்டும் எவ்வளவு சந்தோஷமடைந்திருப்பார்கள் என்பதை விவரித்துக் கூற முடியுமா? ஹிட்லரும், டோஜோவும் எப்படி இடிந்து போயிருப்பார்கள் என்று சொல்ல முடியுமா?

அந்தச் செய்தி சுமார் ஒரு வாரங் கழித்தே உலகோரின் செவிகளில் விழுந்திருக்கிறது. இத்தாலி சரணாகதி அடைந்துவிட்டது. இனி இத்தாலியர் நேசதேசத்தார் பக்கம் என்றால், ஹிட்லருக்கு ஒரு கால் ஒடிந்தது போல அல்லவா? எத்தனையோ போர் முனைகளில் இத்தாலியத் துருப்புகள் ஹிட்லர் கட்சியிலிருந்து வந்ததால், அவருக்கு எவ்வளவோ சௌகரியமாக இருந்து வந்ததே!

ஒரு போர் முனையிலிருந்து பின் வாங்க வேண்டுமென்றால், அந்த முனையிலே பீரங்கிக்கு உணவாக இத்தாலியர்களை முன்னாலே நிறுத்தி விட்டு, நாஜிப் படைகளை யெல்லாம் வெகு பத்திரமாக, வேகமாகச் செல்லும் மோட்டார்களிலும், விமானங்களிலும் ஏற்றி பத்திரமான இடத்திற்கு அனுப்ப முடிந்து கொண்டிருந்தது. பால்கன் பிரதேசங்களிலும், பிரான்ஸிலும், மற்றும் பல இடங்களிலும் போலீஸ் வேலை செய்ய இத்தாலியர்கள் ஹிட்லருக்கு ரொம்ப உதவியாக இருந்தார்கள். வட ஆப்பிரிகப் போர்களிலும், ஸிஸிலியிலும் அதிகம் அடிபட்டவர்கள் யார்? இத்தாலியர்கள் தானே?

நேசதேசத்தார் இத்தாலியில் இறங்கியிருக்கும் இச்சமயத்திலே, இத்தாலியர்கள் மட்டும் தைரியமாக அவர்களை எதிர்த்து நிற்பார்களேயானால், ஹிட்லர் அதிகப்படியான ஜெர்மன் படைகளை இத்தாலிக்குள் கொணர்ந்து குவிக்கத் தேவை இருந்திராது. நேசதேசப் படையினருக்கும் முன்னேறும் வேலை சற்று கடினமாகவே இருக்கும்.

ஹிட்லருக்கு, ஒரு கால் போனது போலத் தான்.

இத்தனையையும் கவனிக்கும்பொழுது, இத்தாலி போரிலிருந்து விலகி, நேசதேசத்தார் பக்கம் சேர்ந்தது, ஹிட்லருக்கு ஒரு 'கால்' போனது போல்தான் என்று சொல்லுவதில் தவறென்ன இருக்கிறது? இனி அவர் 'நொண்டி' நொண்டிதான்! முன்போல் ஜோராக அவர் 'நடக்க' முடியாது, நேசதேசத்தாருக்கு இது ஒரு மகத்தான வெற்றி தான். யுத்தத்தின் கடைசி பாகத்தின் ஆரம்பம் தான் ஸிஸிலி வெற்றி என்றார்கள். இப்பொழுது யுத்தத்தின் முடிவு கண்களில் படுவது போலிருக்கிறது இத்தாலியின் வீழ்ச்சியால். இது எண்ணி மகிழத்தக்க செய்தியா அல்லவா? இத்தகைய செய்தியை அனுப்பியுள்ள ஐஸன் ஹோவரை உலகம் என்றும் மறக்காது. என்றோ ஒரு நாள் ஆகப் போகிற காரியத்தை இன்றே ஒருவர் செய்து முடித்துவிட்டால், சந்தோஷப்பட வேண்டியது தானே நாம்!

ஆகஸ்டு மாசத்திலிலேயே மார்ஷல் படாக்ளியோ சமாதானப் பேச்சுக்களைப் பேசத் தொடங்கிவிட்டாராம். நேசதேசத்தாரின் கை உயர்ந்து விட்டது; அவர்கள் இனி தம் விரோதிகளை சும்மா விட்டுவைக்கப் போவதில்லை; மடை திறந்த வெள்ளம்போல் தான் பாய்ந்து வரப்போகிறார்கள்; பெருகி வரும் வெள்ளத்தை எதிர்த்து நிற்பது மடத்தனம் என்பது அவருக்கு நிச்சயமாகத் தெரிந்துவிட்டது. வீணாக, வெறுங்கையோடு நின்று, பீமசேனனை யாராவது எதிர்க்க முயன்றால், அது மடத்தனம் தானே? அதேபோல, நேசதேசத்தார் போட்டாபோட்டியிலே, இத்தாலிய ரயில்வேக்கள் எல்லாம் பாழாயின. தொழிற் சாலைகள் நாசமாயின. மக்களின் மனதிடம் மாயமாகியது, தப்பி ஓடவோ வழியில்லை. பிரன்னர் கணவாயிலே பிசாசுபோல உட்கார்ந்திருக்கிறார்கள் நாஜிகள், மற்ற திசைகளிலும் செல்ல வழியில்லை, அர்த்தமில்லாது எதிர்ப்பதால், வீணுக்கு சொத்துக்களும் நஷ்டம், ஆட்களும் சேதம். அதனால் தான், வெகு நாசூக்காக, ஹிட்லர் கோஷ்டியினர் நன்றாக மோப்பம்பிடித்து விடாத வகையில், நேசதேசத்தாரிடம் இத்தாலிய அரசாங்கத்தின் தலைவராக இருந்த மார்ஷல் படாக்ளியோ சமாதானப் பேச்சுக்கள் பேச யத்தனித்தார்.

எதிர் பார்த்தது தான்.

மார்ஷல் படாக்ளியோ முஸோலினியின் வீழ்ச்சிக்குப் பிறகு பதவியை ஏற்றபோதே, இது எதிர்பார்க்கப்பட்டதுதான். ஆனால், அப்புறம் அவர் நடந்துகொண்ட தினுஸு கொஞ்சம் சந்தேகத்திற்கு இடங் கொடுத்தது. அதற்கு ஹிட்லரின் ஆட்கள்தான் காரணம். ஹிட்லரும் அவரை நம்பவில்லை. திடீரென்று மார்ஷல் படாக்ளியோ நேசதேசத்தாரிடம் இத்தாலியை சரண் புகவைத்து விடக்கூடும் என்று அவரும் எதிர்பார்த்திருக்கிறாப்போலிருக்கிறது. அவ்வாறு அவர் செய்துவிட்டால், அதற்கு அப்பால் தான் என்ன செய்ய வேண்டுமென்பதை அவர் முன் கூட்டியே தீர்மானித்து வைத்திருக்கிறாப்போல் தெரிகிறது.

பெரிய ஆச்சரியந் தான்.

இத்தாலி சார்பிலே மார்ஷல் படாக்ளியோ நேசதேசத்தாரிடம் சரணாகதியடைந்த செய்தி, சுமார் ஒருவாரம் வரை ஹிட்லருக்குத் தெரியாமலிருந்தது பெரிய ஆச்சரியந்தான்! அந்தச் செய்தி வெளியானதும், அங்கங்கே தயாராக இருந்த ஜெர்மன் படைகள் வட, மத்திய இத்தாலிய பிரதேசங்களை 'டக்' என ஆக்ரமித்துக் கொண்டுவிட்டன. ஆனால் இத்தாலியக் கடற்படையில் ஒரு பகுதி மட்டும் நேசதேசத்தாருக்குக் கிடைத்தது. இனி நாஜிகளை மட்டும் எதிர்த்து விரட்டவேண்டிய வேலை ஏற்பட்டது. அவ்வளவுக்கவ்வளவு சௌகரியந்தானே?

இப்பொழுது தான் ஹிட்லருக்கு சரியான கஷ்டகாலம் ஆரம்பமாயிருக்கிறது என்று சொல்லலாம். ஹிட்லர் இருக்கிறார் நம்மைத் தாங்கிப் பிடிக்க என்ற எண்ணத்தோடு முஸோலினி திமிர்பிடித்து இத்தாலியை 1940-ம் வருஷம் ஜூன் மாதம் 11-ந் தேதி, உலகோர் 'சீ! சீ!' என்னும் தினுஸிலே போரில் இறக்கினார்.

முசோலினியின் செயல் கோதையின் செயல்.

ஒரு புறம் ஒரு பெரிய முரடனது இரும்புப் பிடிகளை அகற்றி தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முயலும் ஒரு அழகியை, பின்னாலிருந்து குத்தித் தள்ள முயலும் ஒரு கோழையின் செய்கையை நிகர்த்திருந்தது முஸோலினி பிரான்ஸ் மீது பாய்ந்த விஷயம். சரியாக மூன்று வருஷங்களும், அதற்கு மேல் இட்டத் தட்ட மூன்று மாசங்களும் இத்தாலி, ஹிட்லரது தயவாலே போர்க் கோலம் பூண்டு, நேச தேசத்தாரை எதிர்த்து நின்றிருக்கிறது. முஸோலினி வீழ்ந்ததுமே இத்தாலியின் எதிர்காலம் இன்னதென்று தீர்மானமாகிவிட்டது. பல்விழுந்து தள்ளாடிப் போனவன் பயில்வானாக இருந்தாலும், அவனை யார் மதிக்கப் போகிறார்கள்? 'சரித் தான் போ ஐயா!' என்று சாதாரண ஆட்களும் அவனைப் பிடித்துத் தள்ளி விட்டுத் தான் போவார்கள். அதே மாதிரி, முஸோலினி ஆரம்பித்த பாஸிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்களே முஸோலினி மீது வெறுப்புக் கொண்டு விட்டார்கள். அவர் செய்வதெல்லாம் உருப்படாக் காரியம் என்பதை உணர்ந்தார்கள். உலகம் புகழ் முஸோலினியாக இருந்ததுபோக, ஹிட்லர் அடிமை முஸோலினியாக அவர் மாறியதுமே, அவருக்கு உள் நாட்டிலேயே மதிப்புப் போய் விட்டது. போதாக் குறைக்கு, குளிக்கப் போய் சேற்றை வாரிப் பூசிக் கொண்ட கதையாக, இத்தாலிக்கு ஒரு சாம்ராஜ்யத்தைச் சம்பாதிக்கப் போகிறேன் என்று கிளம்பின முஸோலினி, அபிசீனியாவை இழந்ததோடில்லாமல், லிபியாவையும், ஸிஸிலியையும் கோட்டை விட்டு விட்டு, வெறுங்கையோடு வீட்டு வாசலில் வந்து நின்று விட்டார். நேச தேசத்தாரும் அதே வீட்டு வாசலுக்கு வந்து விட்டார்கள். அப்புறமும் முஸோலினிக்கு உள்ளூரிலே மரியாதை கிடைக்குமா என்ன? உள் நாட்டிலே ஏற்பட்டிருக்கும் கொந்தளிப்பை அறியாது, கடைசி சமயத்தில் கூட, அவர் இத்தாலிய மன்னரை மிரட்டிப் பார்த்தாராம். ஆனால் மிகா சாதுவான மன்னர் கூட, அப்பொழுது கோபமடைந்து விட்டார். அதன் பயனாக முஸோலினி உடனே கைது செய்யப்பட்டார்.

ஒப்பந்தத்தை எப்போது வெளி யிடுவது?

இப்பொழுது இத்தாலி சரணாகதி அடைந்து விட்டது. போரின் போக்கே கிடு கிடு என்று மாறப் போகிறது. ஹிட்லர் தமது படைகளைக் கொண்டு ரோம புரியைக் கூடப் பிடித்துக் கொள்ளச் செய்து விட்டார். ஜெர்மானியருக்கும் நேச தேசத்தாருக்கும் இத்தாலிய மண்ணில் கடும் போர் நடக்கிறது. தமக்கு சௌகரியமான சந்தர்ப்பம் வரும் பொழுதே இந்தச் சமாதான உடன்படிக்கையைக் குறித்து விஷயத்தை வெளியிடப் போவதாக நேச தேச ராணுவத் தலைவர் முன் கூட்டியே சொல்லியிருந்தாராம்.

அதன்படி, நேபிள்ஸ் துறைமுகத்தருகே நேசப் படைகள் இறங்கிய பின் தான், இத்தாலி சரணடைந்த செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. அது தவிர, இன்னும் பல இடங்களிலும் நேசப் படைகள் இறங்கி விட்டன. இறங்கின இடங்களில் எல்லாம் எதிர்ப்பு இருந்த போதிலும், நேசப் படைகள் பிடித்த இடங்களை விடாது, தைரியமாக முன்னேறிக் கொண்டிருக்கின்றன.

இத்தாலிய மன்னரும், படாக்ளியோவும் கைதியானார்கள், கொல்லப் பட்டார்கள் என்றெல்லாம் முன்னாடி பல செய்திகள் வெளியாயின. ஆனால் அவர்கள் பத்திரமாக வேறு இடத்தில் இருப்பதாக அவர்களே ரேடியோ மூலம் தெரிவித்திருக்கிறார்களாம். முஸோலினியை ஹிட்லர் விடுவிக்க ஏற்பாடு செய்து விட்டதாகவும் ஒரு செய்தி கூறுகிறது இத்தாலிய அரசாங்கம் ஜெர்மனி மீது போர் தொடுக்கும்படி ஏற்படலாமென்றும், கண்ட கண்ட இடங்களில் இத்தாலியர் ஜெர்மானியரோடு கைகலக்கக் கூடும் என்றும் இன்னொரு செய்தி கூறுகிறது.

இத்தாலியப் படை கலைக்கப் படுகிற தென்று ஒரு தகவல் வந்திருக்கிறது. பிரான்ஸிலிருந்த இத்தாலியப் படைகள் பல, சாமார்த்தியமாக இத்தாலிக்குத் திரும்பி விட்டனவாம். இனி இத்தாலியிலிருந்தே ஜெர்மனியைத் தாக்க நேச தேசத்தார் ஏற்பாடு செய்யக் கூடும்.

அதற்கு முன் இத்தாலியில் பல கடுமையான போர்கள் நடக்கக் கூடும். ஹிட்லர் இத்தாலியிலே பதினைந்திற்கு மேற்பட்ட டிவிஷன் படைகளைக்

கொணர்ந்து வைத்திருக்கிறாராம். பாழடைக்கப்பட்ட பிரென்னர் கணவாயில் உள்ள பாலங்களை நாஜிப்படைகள் சீர்படுத்துகின்றனவாம். மேற் கொண்டும் ஜெர்மன் படைகள் இத்தாலிக்குள் வந்து கொண்டிருக்கின்றன. இப்பொழுதே ஸெலர்னோ என்ற இடத்திற்கு மேல் கடுமையான விமானப் போர் நடந்திருக்கிறது. ஜெர்மானியரின் விமான எதிர்ப்பு பலமாகவே இருக்கிறதாம். ஸிஸிலியை விட இத்தாலி பெரிய பிரதேசமல்லவா? தவிர, ஜெர்மானியர் வட இத்தாலியில் வெகு காலமாக, பலமான ஏற்பாடுகளைச் செய்து வைத்திருக்கிறார்கள். ஆகவே, நேச தேசத்தார் நிதானமாகவே முன்னேற வேண்டி யிருக்கும்.

இத்தாலி விலகியதனால் ஹிட்லருக்கு நஷ்டம்

ஆனால் ஒன்று, இத்தாலி போரிலிருந்து விலகியதால், ஹிட்லருக்கு இத்தாலியிலிருந்து கிடைத்து வந்த சாமான்களும், விமானங்களும், கடற்படை உதவியும இல்லாது போய்விட்டதல்லவா?

கிரீஸ், ஆல்பேனியா, வட மத்திய இத்தாலி, யூகோஸ்லாவியா, டாடிகானஸ், ரோட்ஸ் தீவுகள் ஆகிய பிரதேசங்களில் எல்லாம் புதிதாக ஜெர்மன் படைகளைக் கொண்டு வைக்க வேண்டி வந்து விட்டதல்லவா? இதனால் ஜெர்மனியிலே ஆள் கஷ்டம் அதிகமாகி யிருக்குமல்லவா?

அது அதிகமாயிருக்கிறது என்பது தான் நன்றாகத் தெரிந்திருக்கிறதே! ஜெர்மனியிலே இப்பொழுது அறுபது வயது ஆனவர்களைக் கூட ராணுவத்தில் சேரும்படி ஹிட்லர் உத்திரவு போட்டிருக்கிறார். ஜெர்மானியர் கடுமனத்தினர்கள் என்பதில் சந்தேகமில்லை. ஹிட்லரின் உபதேசம் அவர்கள் மனங்களிலே அவ்வளவு நன்றாக ஊறிப் போயிருக்கிறது. கடைசிவரை நின்று போராடியே தீர்ப்பார்கள்.

இப்பொழுது இத்தாலியிலே, நேபிள்ஸ் அருகிலும், மற்ற இடங்களிலும் நடக்கும் சண்டை வரவர வலுத்து வருகிறதாம், மலைகளிலே நாஜிகள் ஏகப்பட்டவர்கள் மறைந்து இடக்கிறார்களாம். பிரிட்டிஷ் ஐந்தாவது படையை, சிறந்த நாஜி டாங்கிப் படைகள் எதிர்த்துப் போராடுகின்றனவாம். பல கிராமங்கள் பல முறை கைமாறி விட்டனவாம். இத்தாலியர்கள் சில இடங்களில் ஜெர்மானியரை எதிர்க்கத் தொடங்கிவிட்டார்களாம்.

சர்ச்சில் உறுதி.

இதை யெல்லாம் எதிர் பார்த்தே பிரதம மந்திரி சர்ச்சில், 'ஐரோப்பாவில் அடிமைத் தளையில் சிக்கி அவதிவுறும் மக்களை விடுவிக்கச் செய்யும் முயற்சியில் இது முதல் படி தான்; நாம் செல்ல வேண்டிய தூரம் மிக அதிகம். பாதை யெங்கும் பல எதிர் பாராத கடுமையான கஷ்டங்கள் ஏற்படலாம்; ஆனால் ஒன்று மட்டும் உறுதி; ஐக்கிய நாடுகளின் விஷயத்திலே பிரிட்டிஷார் தங்களது பூரண சக்தியையும் உபயோகப்படுத்தத் தயங்கமாட்டார்கள்' என்று கூறியிருக்கிறார்.

முஸோலினியையும் அவரது குடும்பத்தாரையும். சிறந்த ஹிட்லர் படையினர் விடுதலை செய்து விட்டார்களாம். முஸோலினி ரொம்ப களைத்துப் போயிருக்கிறாராம். விடுதலை பெற்றதும் தூங்கினாராம் நன்றாக. வேறு என்ன செய்ய முடியும் அவர்? அவர் ஹிட்லரோடு டெலிபோனில் பேசினாராம்.

கில்லாடிக் கேற்ற தூங்கு மூஞ்சி சகா

இந்த 'விஸ்வாசமுள்ள ஆசாமி'யை தமது நண்பராகப் பெற்றதே ஒரு பாக்கியமெனப் புகழ்ந்து கொள்ளுகிறார் ஹிட்லர். ஒரு கில்லாடிக் கேற்ற தூங்கு மூஞ்சி சகா தான் முஸோலினி. இவரை ஒரு பொம்மை இத்தாலிய பாஸிஸ்ட் அரசாங்கத்துக்குத் தலைவராக ஹிட்லர் ஆக்கப் போவதாகச் சொல்லுகிறார்கள். பாஸிஸ்டு வெறி பிடித்தவர்கள் எல்லாம் இந்த அரசாங்கத்தில் சேரக் கூடும். ஆனால் அவர்கள் காணப் போகும் பலன் சைபராகத்தானிருக்கும் என்பதில் சந்தேகமேயில்லை. முப்பது (பாஸிஸ்டு) டிவிஷன் படைகள் ஜெர்மானியருடன் சேர்ந்திருப்பதாக ஒரு ஜெர்மன் செய்தி அறிவிக்கிறது. இது எவ்வளவு தூரம் வாஸ்தவமோ தெரியவில்லை.

பிரிட்டிஷ் எட்டாவது படை வெகு ஜோராக இத்தாலிக்குள் சென்று கொண்டிருக்கிறது. நேச தேசப் படைகள் முதன் முதலில் இறங்கிய பிரதேசத்திலிருந்து எழுபத்தைந்து மைல்கள் முன்னேறியிருக்கிறார்களாம். நேபிள்ஸ் அருகே இறங்கிய படையினர் அதிக தூரம் செல்லவில்லை.

இத்தாலி சரணடைந்து விட்டதால், இத்தாலியக் கப்பற்படையினால் ஏற்படக் கூடிய தொந்தரை இனி இராது. ஆனால் மத்யதரைக் கடல் பிரதேசத்தில் யுத்தம் தீர்ந்துவிட்டது என்று நினைத்து விட முடியாது.

மத்ய தரைக் கடலில் இனி அதிகமான நேச தேசக் கப்பல்கள் இருக்கத் தேவையில்லை. அவற்றில் ஒரு பகுதியை இந்துமகா சமுத்திரத்திற்கோ, பஸிபிக் பிரதேசத்திற்கோ அனுப்பலாம். இந்தியாவிற்கும் இனி மத்ய தரைக் கடல் வழியாக சாமான்கள் அதிகமாக வரலாம்.

இத்தாலியின் சரணகதியால், பால்கன் பிரதேசங்களுக்கு ஆபத்து நெருங்கிவிட்ட தெனலாம். இல்லை! அப்பிரதேசங்கள் ஹிட்லரின் பிடியிலிருந்து விலகும் காலம் நெருங்கி விட்டதென்று கொள்ளலாம்.

சார்டீனியா, கார்ஸிகா, கிரீட் போன்ற தீவுகள் மீது நேச தேசத்தார் கூடிய சீக்கிரமே படையெடுக்கலாம். ஆனால் இந்தச் சந்தர்ப்பத்திலே சேனாபதி ஐஸன்ஹோவர் கூறியிருக்கும் வார்த்தைகள் நினைவிற்கு வருகின்றன. 'சும்மா ஜெர்மானியர் இருக்குமிடங்களை யெல்லாம் தேடிப் போய், அவர்களை அங்கிருந்தெல்லாம் விரட்டியடிக்கப் போராடுவதில் எனக்கு நம்பிக்கையில்லை. கொடுத்தாலும் பூசை சம்பிரமமாகக் கொடுக்கவேண்டும். நாலா புறங்களிலிருந்தும் எதிரியின் படைகளை வளைத்துக் கொண்டு, நாயை அடிப்பது போல் அடித்து, அவற்றை நசுக்கிக் கசக்கி விடுவதிலேயே எனக்குப் பிரியம் அதிகம்' என்று கூறியிருக்கிறார் அவர். அவருக்கே பூரண ஸ்வதந்திரம் கொடுத்து விட்டார்கள் நேச தேசத் தலைவர்கள். ஆகவே, அடிக்கடி அற்புதமான செய்திகளை இத்தாலிய முனையிலிருந்து நாம் பெறலாமென்று நினைக்கிறோம்.

யுத்த நெருக்கடியும் அரசாங்க உதவியும்

செங்கற்பட்டு ஜில்லா

சென்ற இரண்டு மாதங்களாக இந்த ஜில்லாவில் அரிசி பஞ்சம் ஏற்பட்டால் அதற்கு பொது மக்கள் இப்பொழுதே எச்சரிக்கையாய் இருக்க வேண்டுமென்றும், பொது ஜனங்கள அரிசியில் செய்யப்படும் பலகாரங்களுக்கு பதிலாக கம்பு, சோளம், கேழ்வரகு மாவுகளினால் தக்க உணவுகளையும பலகாரங்களையும் தயாரித்து அடுத்த அறுவடை வரையில் நெருக்கடியைப் பொறுத்துக் கொள்ள வேண்டும என்றும், பிரசாரம் தீவிரமாக நடைபெற்றது. இதற்காக ஓர் ஸ்பெஷல் தாசில்தார் அவர்களும் ஜில்லா லெக்சரர் அவர்களுடன சுற்று பிரயாணம் செய்தார்கள். ஜில்லா ஆர்கனைசர் முக்கிய இடங்களில் இதைப் பற்றியும், அதிக உணவுகளை உண்டாக்கும்படிக்கும் பிரசாரம் செய்து வருகிறார்கள்.

கடற்கரை யோரங்களில் கிராமப் பாதுகாப்புச் சங்கங்கள், கிராம வஸ்தாதுகள் நல்ல பயிற்சி பெற்று வருகிறார்கள்.

முக்ய நகரங்களில் காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் முதலிய இடங்களில் கலெக்டர் அவர்கள் ஏழைகளுக்கு அரிசி 0–6–6 விகிதம் விற்கும்படி உத்திரவு இட்டிருக்கிறார்கள். தாசில்தார்கள் அதிகமான நெல் வைத்திருக்கும் முதலாளிகளுக்கு நெல்லை சர்க்கார் அனுமதியில்லாமல் விற்கக் கூடாதென்றும் உத்திரவிட்டிருக்கிறார்கள். இப்பொழுது ரூபாய்க்கு 5⅞ படி விகிதம் விற்று வருகிறார்கள். இதனால் அரிசிக் கஷ்டம் குறைந்து வருகிறது.

சர்க்கரையும, மண்ணெண்ணையும் சுலபமாக எல்லோருக்கும் கிடைக்கிறது.

தேசியப போர் முனை உத்யோகஸ்தர்கள், பொது ஜனங்களை அரசாங்கத்திற்குக் கடன் கொடுத்து உதவும்படி பிரசாரம் செய்து வருகிறார்கள். அதுவும நடக்கிறது.

சேலம்

சென்ற ஏப்ரல் மாதம் முதல் உணவுப் பொருட்களின் நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே வந்தது. பக்கத்து ஜில்லாக்களி லிருந்து அரிசி இறக்குமதியாவதனால் நிலமை சற்று தேவலை. இதற்கு ரெவின்யு இலாக்காவும் கூட்டுறவு இலாக்காயும் மிகவும் முயற்சித்தன. அரிசி அனைவருக்கும் கிடைக்கத் தக்கபடி விநியோகிப்பதிலும், அரிசியைச் சேர்த்து வைக்காதபடியும், வியாபாரிகள் கொள்ளை லாப மடிக்காதபடியும் தடுக்கும் பொருட்டு, அதிகாரிகள் கடுமையான முறைகளைக் கையாளுகிறார்கள். கிடைக்கக் கூடிய சரக்குகளை நேர்மையான முறையில் அனைவருக்கும் விநியோகிக்கத் தக்கபடி நியாய விலைக்கடைகள் கீழ்க் கண்ட பல விடங்களில் ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றன.

பரமத்தி	தோப்பூர்
பாண்டமங்கலம்	காிமங்கலம்
போத்தனூர்	இந்தூர்
அணகூர்	பில்லியனூர் அக்ரகாரம்
ஜேடர்பாளையம்	பாப்பாரப்பட்டி
ஆத்தூர்	பெண்ணாகரம்
கங்கவல்லி	பாலக்கோடு
விருகனூர்	ஹோசூர்
தலைவாசல்	ஏர்க்காடு
எத்தாபூர்	ஓமலூர்
தர்மபுரி	ஜலகண்டபுரம்
குமாரசாமிப்பேட்டை	தாராமங்கலம்
நல்லம்பள்ளி	

அன்றியும், பல தாலூக்கா ஆபீஸ்களிலும் சப்-தாலூக்கா ஆபீசுகளிலும் கட்டுப்பாட்டு விலைக்கு லைசென்ஸ் பெற்ற வியாபாரிகள், அதிகாரிகளின் கோரிக்கைப்படி வந்து சேர்ந்துள்ள உணவுப் பொருட்களை, விற்கிறார்கள். அநேக கூட்டுறவு பண்டக சாலைகளி லிருந்தும் உணவுப் பொருட்கள் பொது ஜனங்களுக்கு விற்கப்படுகின்றன. வேலூரில் ஒரு வியாபாரிக்கு லைசென்ஸ் கொடுக்கப் பட்டிருக்கிறது. அவர் கட்டுப்பாட்டு விலைக்கு அரிசி விற்கிறார். ஊத்தங்கரையில் உள்ள வியாபாரிகள் சேர்ந்து ஒரு வியாபார சங்கம் அமைத்திருக்கிறார்கள். இதற்குத் திரட்டிய ரூ. 2 000-யும் முதலாக வைத்து, விவசாயிகளிடம் குறைந்த விலைக்குக் கொள் முதல் செய்து, கட்டுப்பாட்டு விலைப்படி ஏழைகளுக்கு விற்கின்றனர். கல்லாவியிலுள்ள கூட்டுறவு பண்டக சாலையிலும் இது போலவே தான் செய்கிறார்கள். நியாய விலைக் கடைகளில் ஏழை ஜனங்களுக்கு விற்கும் பொருட்டு 1,000 மூட்டை நெல் பரமாத்தி சப் தாலூக்காவிற்குத் தேவை என்று அதிகாரிகள் கோரியிருக்கின்றார்கள். சேலத்திலுள்ள ஏழை மக்களுக்கு விற்கப் படும் பொருட்டு டெங்கனிக் கோட்டையிலிருந்து சேலத்திற்கு 2,000 மூட்டை கேழ்வரகை அனுப்பி வைத்திருக்கிறார்கள்.

கம்பு, கேழ்வரகு முதலிய உணவுப் பொருள்களை உபயோகிக்கும்படியும் உணவுப் பொருள்களைச் சேமித்து வைப்பதனாலும் கொள்ளை லாப மடிப்பதனாலும் உண்டாகக் கூடிய தீமைகளைக் குறித்தும் தேசியப் போர் முனையாளரும் ரெவின்யு உத்தியோகஸ்தர்களும் பலத்த பிரசாரம் செய்தனர். ஆத்தூர் தாலூக்காவிலும் பெண்ணாகரம் சப் தாலூக்காவிலும் கிஸ்தி விதிக்கப்பட்ட தரிசு நிலங்களிலும் கிஸ்தி விதிக்கப்படாத தரிசு நிலங்களிலும் கிஸ்தி கட்டாதபடி சாகுபடி செய்யும் அநேக விவசாயிகளுக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. இதனால் ஆத்தூர் தாலூக்கா கிஸ்தி வரவில் ரூ. 3,881 பள்ளம் விழும்.

'ராம தீபம்' விளக்கைக் குறித்து தேசியப் போர் முனையாளர்கள் வெகுவாகப் பிரசாரம் செய்கின்றனர். திருச்செங்கோடு, நாமக்கல், தர்மபுரி தாலூக்காக்களில் இவற்றை விற்க, அந்தத் தாலூக்காவிலுள்ள கூட்டுறவு பண்டக சாலையாருக்கு ஏஜென்ஸி கொடுக்கப்பட வேண்டுமென்று சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. சென்ற ஆகஸ்ட்டு மாதம் 5-ம் தேதி வரை சேலத்தில் நடைபெற்ற அகில இந்திய காட்சி சாலையில் அமைக்கப்பட்டிருந்த தேசியப் போர் முனைப் பகுதியில், இந்த விளக்குகள் உபயோகித்துக் காட்டப்பட்டன. விளம்பரமும் செய்யப்பட்டன.

கிராமப் புரங்களில் உணவு நிலைமை அவ்வளவு நெருக்கடியானதாயில்லை. நெசவாளிகள் மிகவும் உள்ள கிராமங்களிலும், சேலம் போன்ற சில பட்டணங்களிலும் மட்டும் உணவுப் பொருட்களின் நிலைமை சற்று கஷ்டமா யிருக்கிறது. இந்த இடங்களி லெல்லாம் ஒவ்வொருவருக்கும் பங்கிடுச் சீட்டுக்கள் கொடுத்து, ஒவ்வொரு குடும்பத்தாரும் இன்னின்ன அளவிற்குத் தான் தானியங்கள் வாங்கலா மென்று விதித்து, நிலைமையை அதிகாரிகள் சமாளித்துக் கொண்டு வருகிறார்கள். பெரிய மிராசுதார்களும் விவசாயிகளும் இருப்பு வைத்திருக்கும் நெல்லைக் கொடுக்கும்படி அதிகாரிகள் கேட்டுக் கொள்ளுவதன் பயனாக, நியாய விலைக் கடைகளுக்குச் சரக்கு ஒழுங்காகப் போய்ச் சேர முடிகிறது. இதனால் யாரும் சேமித்து வைக்க முடியாமற் போய்விடுகிறது.

சமீபத்தில், சில பாகங்களில் மழையும் பெய்தது. ஆகவே, விவசாயிகளில் சிலர், தாம் கட்டிவைத்திருக்கும் அதிகப்படி தானியத்தை எடுத்து விற்கக்கூடும். இந்தக் காரணங்களால் விலைவாசிகள் அடுத்த சில மாதங்களில் குறையக் கூடும்.

மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை என்ற கூப்பாடு இப்போது அடங்கி விட்டது. அது ஒழுங்காகக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. அல்லாமலும் பொது மக்களும் அதைக் குறைவாக உபயோகிக்கப் பழகிக் கொண்டார்கள்.

தொழிலாளர் பகுதி

தொழிலாளர்களுக்கு அரசாங்க உதவி

புதிய சட்டங்கள்

அரசியல் வாழ்வில் சாதாரணமாக யுத்தம் நேருவது இயற்கை தான். இதைப் பேறுகாலத்திற்கு ஒப்பிடக் கூறலாம். பேறுகாலக் கஷ்டங்கள் மகா கடுமையானவை. ஆனல் பேறுகாலத்தின் பலன் மகா இன்பந் தரத்தக்கது. சிறு குழந்தையைக் கண்டால் யாருக்குத் தான் இன்பம் தோன்ருது. ஆனல் குழந்தை மட்டும் எப்படிப்பட்ட ஊனமுமில்லாமல் பிறக்கவேண்டும். அது போலவே தான் யுத்தத்திலும். யுத்த காலத்தில் பல வகைகளிலும் கஷ்டங்களுக்கு உள்ளாக நேருகிறது. ஆனல், பேறு காலத்திற்குப் பிறகு இன்பத்தை யூட்ட வல்ல குழந்தை பிறப்பதைப் போலவே, யுத்தம் முடிந்த பிறகும் இன்பந் தரத்தக்க பலன்கள் ஏற்படும். உற்பத்தி சம்பந்தமாகப் பொது மக்கள் முழு முயற்சி செய்கிருர்கள். ஏன் ? அதனல் மக்கள் அனைவருடைய எல்லா வகைத் தேவைகளும் பூரணமாக நீங்குகிறது. இந்தப் பொருட்களைத் தொடர்ச்சியாக உற்பத்தி செய்ய வேண்டியிருக்கிறது. ஏனென்ருல் தொடர்ச்சியாக அது அளவில்லாமல் நாசஞ் செய்யப்பட்டு வருகிறது. நிலம் மட்டும் இருந்தால் சாகுபடி செய்துவிட முடியுமா ? அல்லது முதல் மட்டுமிருந்தால் சாகுபடி செய்துவிட முடியுமா ? முடியாது. மனித உழைப்பும் வேண்டும். இது இன்றி யமையாதது. மனித உழைப்பு விவசாயத் துறையிலும் கைத்தொழில் துறையிலும் பயன்படும். இதற்கு, மற்ற நாடுகளில் கொடுக்கப்படுவது போலவே, இந்தியாவிலும் அரசாங்கத்தார் வசதிகள் கொடுக்க வேண்டும். இந்த வசதியும், பாதுகாப்பும், உரிமைகளும் பூரணமாயிருக்க வேண்டும். ஏனென்ருல், இவற்ருல் தொழிலாளர்களுக்குப் பூரணமான பொறுப்புண்டாகிறது.

தற்கால யுத்தம் வந்தது. கிழக்குப் போர்முனைக்குத் தேவையான பொருட்களை யெல்லாம் உற்பத்தி செய்து உதவ வேண்டிய பொறுப்பு இந்தியா அரசாங்கத்திற்கு ஏற்பட்டது. ஆகவே, தொழிலாளர் விஷயங்களில் சற்று அதிக கவனம் இந்தியா அரசாங்கத்தார் செலுத்தியது நியாயம் தான். தொழிலாளர் சம்பந்தமாக இந்தியா அரசாங்கத்தாரின் கொள்கை என்னவென்று தொழில் இலாக்கா காரியதரிசியான மிஸ்டர் எச். சி. ப்ரையர், சி.ஐ.இ., ஐ.சி.எஸ். சமீபத்தில் செய்ததோர் வானெலிப் பிரசங்கத்தில் குறிப்பிட்டிருக்கிருர் :—

> ‘‘ அரசாங்கமும், முதலாளியும், தொழிலாளியும் பரிபூரணமாகவும் தாராளமாகவும் நெருங்கிப் பழக வேண்டும். அப்போது தான் ஒரே நிலையாக உற்பத்தியின் அளவு இருந்து கொண்டிருக்க முடியும். எல்லோருக்கும் வேலை நிபந்தனைகளும் நியாயமானதாயிருக்கும்.’’

தொழிற் சங்கங்களின் முக்கியம்

அரசாங்கமும், முதலாளிகளும், தொழிலாளிகளும் பரிபூரணமாகவும் தாராளமாகவும் நெருங்கிப் பழகுகிருர்கள் என்பதற்கு அர்த்தம் என்ன ? ஒன்றுபட்டு வேலை செய்யும் முறை விருத்தியடைந் திருக்கிறதென்றுதான் அர்த்தம். பாசிஸக் கொள்கைக்கு இது நேர் முரணன கொள்கை. இதனல், ஒருவரையொருவர் நேரில் சந்தித்து, கலந்து பேசி விவாதிக்க இடமுண்டு. இப்படிக் கலந்து பேசத்தக்க நிலைமையை உண்டாக்கிக் கொள்ள வேண்டுமானல், சரியான முறையில் தொழிலாளர்கள் தொழிற் சங்கங்களை அமைத்து நடத்தவேண்டும். தொழிற் சங்கங்கள் நேர்மையான முறையில் வளர்ச்சி யடைந்தால், முதலாளிகளும் தொழிலாளிகளும் அதிகமாக நெருங்கிப் பழக இடமுண்டாகும். இந்தியத் தொழிற சங்க இயக்கம் இன்னும் தகுந்தபடி வலுவடையவில்லை. அன்றியும் இப்போது இயங்கிக் கொண்டிருக்கும் எல்லா தொழிலாளர் சங்கங்களும் அகில இந்திய ஸ்தாபனத்தோடு இணைந்திருக்கவில்லை. ஆகவே, தொழிற் சங்கங்கள் நல்ல முறையில் அமைந்து வேலை செய்தால் மட்டுந் தான், முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் நெருக்கம் ஏற்பட இடமுண்டு என்னும் உண்மையை அரசாங்கத்தார் அங்கீகரிக்கின்றனர். ஆதலால், சரியானபடி தொழிலாளர் சங்கங்களை யமைப்பதற்கு வேண்டிய உதவி செய்யவேண்டுமென்று முடிவு கட்டியிருக்கிருர்கள்.

தொழிலாளர் நன்மைக்கான உத்தியோகஸ்தர்கள்

மத்திய அரசாங்க ஸ்தாபனங்களில் தவிர மற்ற ஸ்தாபனங்களில், தனிப்பட்ட தொழிலாளிகளின் தகராறுகளைத் தீர்த்து வைப்பது போன்ற விஷயங்களில் மாகாண அரசாங்கங்களுக்கு பொறுப்பிருக்கிறது. இந்த வேலையை ‘ லேபர் கமிஷனர் ’ என்னும் உத்தியோகஸ்தர் ஒருவர் செய்கிருர். இத்துடன் மத்திய அரசாங்கத்தார் திருப்தி யடையவில்லை. தொழிலாளர்களின் நன்மைகளைக் கவனிக்கும் உத்தியோகஸ்தர்களை நியமித்திருக்கிருர்கள். இந்த உத்தியோகஸ்தர்கள் தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் நெருக்கத்தை யுண்டாக்கி அரசாங்கத்திற்கு உதவி செய்கிருர்கள். அரசாங்கத்தார் என்னென்ன செய்து கொண்டிருக்கிருர்களென்று, முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் எடுத்து விளக்குகிருர்கள். முதலாளிகளும தொழிலாளிகளும் என்ன நினைக்கிருர்களென்று அரசாங்கத்திற்கு அறிவிப்பார்கள்.

தொழிலாளர் பிரச்சினைகளைக் குறித்து நெருங்கிய தொடர்பு அமைத்துக் கொள்ளுவதற்கு, அரசாங்கத்தார் மற்ெருரு முறையைக் கையாளுகிருர்கள். முற கூறிய மூவினத்தவரைக் கொண்ட மகாநாடு ஒன்றையும், நிரந்தரத் தொழிலாளர் கமிட்டியையும் ஏற்படுத்தி யிருக்கிருர்கள். இந்தியா அரசாங்கத் தொழில் அங்கத்தினர் தான் இதற்குத் தலைமை வகிப்பார். ஜினிவாவிலுள்ள சர்வ தேசத் தொழிலாளர் ஸ்தாபனத்தின் போக்கை யொட்டித் தான் இந்த முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. அந்த மூவினத்தார் மகாநாட்டில், மகாணங்களிலிருந்தும், சுதேச சமஸ்தானங்களிலிருந்தும், முதலாளிகள் தொழிலாளிகள் ஆகிய பிரதிநிதிகள் கூடுவார்கள். இந்தப் பிரதிநிதிகள் ஒரு வட்ட மேஜையைச் சுற்றி உட்கார்ந்து அகில இந்தியப் பிரச்சினைகளைக் குறித்து ஆலோசிப்பார்கள். இது ஒரு ஆலோசனை கூறும் ஸ்தாபனம் தான். என்ருலும், தொழிலாளர் பிரதிநிதிகள் தம் கருத்துக்களை அரசாங்கத்திற்கும் முதலாளிகளுக்கும் தெரிவிப்பதற்கு இது தகுந்ததோர் சந்தர்ப்பமளிக்கிறது. இந்த மகாநாட்டில் ஏராளமான அங்கத்தினர்கள் இருப்பார்களாகையால், வேலை நடை பெறுவதற்குத் தாமதப்படும். அகவே தான், நிரந்தரத் தொழில் கமிட்டி ஏற்பட்டிருக்கிறது. இந்தக் கமிட்டி வருஷத்தில் மூன்று முறைகளுக்கு அதிகமாகவே சந்திக்கிறது. இந்தக் கொள்கையையும் முறையையும் ஆதாரமாகக் கொண்டு, தொடர்ச்சியாக உற்பத்திகள் செய்யவும், எல்லோருக்கும் நேர்மையான முறையில் வேலை நிபந்தனைகளை யமைக்கவும் அரசாங்கத்தார் யோசித்திருக்கிருர்கள்.

தொழிலாளர் சம்பந்தமான சட்டங்களும் இந்தியாவில் கூடியவரை முன்னேற்ற மடைந்திருக்கின்றன. யுத்தத் தொழில் நிலைமையை முன்னிட்டு இவற்றை வெகுவாக விருத்தி செய்திருக்கிருர்கள். யுத்தத் தொழில் என்ருலே, ஏராளமான உற்பத்தி என்று தான் அர்த்தம். ஏராளமான உற்பத்தியாகிற போது, நிலைமையை சற்று சீர்ப்படுத்திக் கொள்ள வேண்டும். சில தகராறுகள் நேரலாம். முதலாளிக்கும் தொழிலாளிக்கும் மனக் கசப்பு ஏற்பட இடமுண்டு. ஏதேனும் முதலாளிக்கும் தொழிலாளிக்கும் தகராறு நேர்ந்தால், நேர்முகமான நடவடிக்கைகள் காரணமாக யுத்த உற்பத்தியில் தாமதம் நேராதபடி கவனித்துக் கொள்ள வேண்டியது அவசியமா யிருந்தது.

தொழில் தகராறுகளைத் தீர்க்க வழி

ஆகவே, அரசாங்கத்தினர் ஒரு முறையை வகுத்திருக்கின்றனர். தகராறுகள் உடையவர்கள் ஒரு குறிப்பிட்ட கால அளவுக்குள் நோட்டீஸ் கொடுக்க வேண்டும். அந்தக் கால அளவிற்குள், அத்தகராறுகளைக் குறித்து விசாரணை செய்து முடிவு கட்டும்படி அரசாங்கத்தார் கட்டளை அனுப்பவேண்டும். இதற்கு, தகராறு உடையவர்கள் அதைச் செம்மையாக உருப்படுத்தித் தொகுத்து அறிவிக்க வேண்டும். இதனல் தொழிலாளிக்கு இரண்டு வகைகளில் நன்மையுண்டு, முதலாவதாக, கூலி நஷ்டமில்லை. நேர் முகமான நடவடிக்கைகள் எதை எடுத்துக் கொண்டாலும் அவர்களுக்கு கூலி நஷ்டம்தான் ஏற்படும். இரண்டாவதாக, நியாயமான தகராறுகள் ஏதேனும் இருக்குமானல், அது விரைவில் பரிசீலனை செய்து ஆலோசிக்கப்பட இட முண்டு. தொழில் விருத்தி காரணமாக விலை வாசிகள் உயருவதனல், தொழிலாளர்களை, பாதிக்கப் படாமல் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு. இந்தப் பொறுப்பை நிறைவேற்றும் பொருட்டு பஞ்சப்படி கொடுக்கிருர்கள். அன்றியும் உணவுப் பொருள் ‘ சப்ளை ’ சம்பந்தமாக, மாகாண அரசாங்கங்கள் தம்மாலானதை அவர்களுக்குச் செய்ய வேண்டு மென்று இந்தியா அரசாங்கத்தார் கட்டளை யிட்டிருக்கின்றனர். சென்னையில் தானியக் கட்டுப்பாட்டுக் கட்டளைப்படி, முதலாளிகளாவது தொழிலாளிகளாவது வைத்து நடத்தும் தானியக் கடைகளுக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. பங்கீடு முறை அமுலுக்கு வந்த பிறகுங் கூட, இந்தக் கடைகள் தொடர்ந்து நடைபெற வேண்டியது அவசியமா யிருக்கிறது. நிற்க, விமானத் தாக்குதல் காலத்தில் இவர்களுக்கு உதவும் பொருட்டு, ஏ.ஆர்.பி. ஸ்தாபனம் ஒன்றை அமைத்திருக்கிருர்கள். சமாதான கால முறையை அடியோடு அலட்சியப் படுத்திவிட்டு, யுத்த கால முறைகள் மேற் கொள்ளப் படவில்லை. நோயாளிகளுக்கு இன்ஷ்யூரென்ஸ் தொகை கொடுப்பதைக் குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. அன்றியும் சம்பளத்தோடு சில விடுமுறை நாட்கள் விடுவது பற்றியும் ஆலோசனை யிருந்துவருகிறது. சுருங்கச் சொல்ல வேண்டுமானல், தொழிலாளர் நிலைமையை முன்னேற்றுவதில் அரசாங்கத்தார் ஓரளவிற்கு அக்கரை கொண்டிருக்கிருர்கள். சமூக நியாயம் எனனும் கொள்கையை யடிப்படையாகக் கொண்ட சமாதானம், இதனல் ஏற்படும்.

யுத்த காயச் சட்டம்

சமீபத்தில் ஒரு சட்டம் பிறந்தது. அதன்படி, யுத்தத்தில் காயப்பட்ட தொழிலாளிக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்பட வேண்டும். இரண்டாவதாக, இந்த நஷ்ட ஈட்டுத் தொகையை முதலாளிகளே கொடுக்க வேண்டும். மூன்ருவதாக முதலாளிகள் தம் பொறுப்புக்களை நிறைவேற்றத் தக்கபடி இச்சட்டம் முதலாளிகளைக் கட்டுப்படுத்துகிறது. இந்தச் சட்டம், 1941-ம் வருஷத்திய யுத்தக் காய அவசரச் சட்டத்திற்கும், தொழிலாளர் நஷ்ட ஈட்டுச் சட்டத்திற்கும் தொடர்புடையது.

1939-ம் வருஷம் சென்னையில் 1,811 தொழிற் சாலைகளும் அவற்றில், 2 லட்சம் தொழிலாளர்களும் வேலை செய்து கொண்டிருந்தனர். ஆனல் 1942-ம் வருஷத்தில், 2,379 தொழிற் சாலைகளும் 2½ லட்சம் தொழிலாளர்களும் இருக்கிறதாகத் தெரிகிறது.

தொழிற் கல்வி திட்டங்கள்.

தொழிலாளர் சம்பந்தமாக மற்ெருரு விஷயத்தையும் குறிப்பிட வேண்டியதவசியம். யுத்த கால வேலைகள் விரிவடைகிற இந்தக் காலத்தில், தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களைத் தயார் செய்து அனுப்பும் விஷயத்தில் அரசாங்கத்தார் மிகுந்த அக்கரை கொண்டிருக்கிருர்கள். யுத்த சம்பந்தமான பல வகைத் தொழில்களிலும் தேர்ச்சி பெறும் பொருட்டு 1940-ம் வருஷம் தொழிற் பயிற்சித் திட்டமொன்றை வகுத்து ஏராளமான தேர்ந்த தொழிலாளர்களைத் தயார் செய்தனர். இவர்கள் படைகளிலும் யுத்த உற்பத்தித் தொழிற் சாலைகளிலும் மிகவும் உபயோகமாயிருப்பார்கள். மற்ற மாகாணங்களை விட சென்னையில் தான் அதிக மாணவர்கள் தயாராகி யிருக்கின்றனர் என்பது திருப்திகரமான விஷயம்.

இந்தியாவில் வழங்கப்படும் இந்தப் பயிற்சி போதாது என்று கருதிய தொழில் மந்திரி மிஸ்டர் பிவின், ஒரு திட்டம் வகுத்தார். இங்கிலாந்திலுள்ள தொழிற் சாலைகளில் இந்திய மாணவர்களைப் பழக்குவது தான் இந்தத் திட்டம். இது பற்றி 1940-ம் வருஷம் ‘ காமன்ஸ் ’ சபையில் இவர் ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்தார். இந்தத் திட்டத்தை வகுத்ததற்கு மூன்று காரணங்களுண்டு :—(1) இந்தியாவில் வெடி மருந்து உற்பத்தியை அதிகப்படுத்துவது, (2) தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் எந்தெந்த முறைகளில் ஒத்துழைப்பிருக்கிற தென்பது பற்றிய பிரிட்டிஷ் முறைகளை உணர்ந்து கொள்ளுவதற்கு, மாணவர்களுக்கு சந்தர்ப்ப மளிப்பது. (3) தொழிற் சங்கத் தத்துவத்தை யுணர்த்துவது. இந்தத் திட்டத்தின் முழு விவரங்களையும் 1940-ம் வருஷம் டிசம்பர் மாதம் இந்தியா அரசாங்கத்தினர் வெளியிட்டனர். இந்தத் திட்டப்படி இங்கிலாந்திற்குப் போய் பயிற்சி பெற்றுத் திரும்பிய 9-வது கோஷ்டியினர் இந்தியாவிற்கு வந்து சேர்ந்து விட்டனர்.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, ‘‘ VICTORY HOUSE ’’, MOUNT ROAD, MADRAS.